නාවෙලි
NAAVELI
# நாவெளி
நாவிதன்வெளி பிரதேச செயலக மாதாந்த மின்னிதழ்
නාවිදන්වෙලි ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලයේ මාසික ඉ - සඟරාව
NAVITHANVELI DIVISIONAL SECRETARIAT MONTHLY E- MAGAZINE

www.navithanveli.ds.gov.lk ds@navithanveli.ds.gov.lk DSNavithanveli 0755424333

மலர்: 20 ✦ இதழ்: 53 ✦ 2025ஆம் வருடம் ✦ ஆவணி மாதம் ✦ இருபத்தைந்தாம் திகதி















| | |
|---|---|
| அபிவிருத்திப் பாதையில் | 04 |
| பொருண்மியம் | 10 |
| கதைச்சாளரம் | 12 |
| தேகாரோக்கியம் | 14 |
| முதலாம் பக்கத்தொடர் | 16 |
| பெண்ணியம் | 22 |
| மானுடம் | 31 |
| அறிவுக் களஞ்சியம் | 33 |
| சட்டம் | 35 |
| உலக அரசியல் | 37 |
| சுற்றுச்சூழல் | 39 |
| கல்வி | 41 |
| சமூகப்பார்வை | 43 |
| குறுக்கெழுத்துப் போட்டி | 46 |
| மருத்துவமும் நாமும் | 47 |
| கவிதைச்சாரல் | 49 |
| கதம்பம் | 50 |
| படலையைத் தேடி | 51 |

## ஆசிரியரிடமிருந்து...

நாவெளி மலர் - **20**இல் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இருபது மாதங்களாக மாதாந்த மின்னிதழை வெளியிடுவதற்கு பல்வேறு வழிகளிலும் உதவிய அனைவருக்கும் நன்றியினைத் தெரிவிக்கின்றேன். அந்த வகையில் இவ் வருடத்தின் எட்டாவது மலராக பல்வேறு செய்திகள் மற்றும் பல்சுவை அம்சங்களைத் தாங்கிய வகையில் நாவெளி மலர் இருபது உங்கள் கரங்களில் இன்று தவழ்கின்றது.

இன்று இலங்கையில் மிகுந்த துயரம் தரும் சமூகப் பிரச்சினைகளில் ஒன்றாக வீதி விபத்துகள் மாறியுள்ளன. உட்கட்டமைப்பு மற்றும் கடுமையான வீதிப் பாதுகாப்பு சட்டங்களில் முன்னேற்றங்கள் இருந்தபோதிலும், விபத்துகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இது ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக இரண்டாயிரத்து ஐந்நூறிற்கு மேற்பட்ட உயிர்களைக் கொன்று, பலரின் வாழ்க்கையையே கேள்விக்குள்ளாக்கும் காயங்களுக்கும் வித்திடுகிறது. வருடமொன்றிற்கு ஆயிரத்து ஐந்நூறிற்கு மேற்பட்ட உயிரிழப்பை ஏற்படுத்தக்கூடிய விபத்துகளும் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட வாகன சேதம் மற்றும் காயங்களை ஏற்படுத்தக்கூடிய விபத்துகளும் இடம்பெறுவதாகக் கூறப்படுகிறது. இந்தத் துயரத்திற்கான மூல காரணம், பெரும்பாலும் போக்குவரத்து விதிகளை மதிக்காத வாகன ஓட்டுநர்களின் அசமந்தமும் கவனக்குறைவான நடத்தையுமாகும். அவர்கள் பெரும்பாலும் மனித உயிருக்கு மதிப்பளிக்கத் தவறுகிறார்கள். இந்த அலட்சியம் பல குடும்பங்களின் வாழ்வை அழிப்பது மட்டுமல்லாமல், நாட்டின் சுகாதார அமைப்பு மற்றும் பொருளாதாரத்தின் மீதும் சுமையை ஏற்படுத்துகிறது.

கவனக்குறைவின் மிகவும் பொதுவான வடிவங்களில் ஒன்று வேக வரம்புகளை புறக்கணிப்பது. குறிப்பாக பேருந்துகள் மற்றும் முச்சக்கர வண்டிகளின் ஓட்டுநர்கள், நெரிசலான வீதிகளில் மிக வேகமாக வாகனங்களை ஓட்டுவதையும், பொறுப்பற்ற முறையில் ஒருவரையொருவர் முந்திச் செல்வதையும், பயணிகளுக்காக ஒருவருக்கொருவர் போட்டியிடுவதையும் காணலாம். இந்தகைய வாகனம் ஓட்டுதல் அவர்களின் உயிருக்கு மட்டுமல்ல, பாதசாரிகள் மற்றும் பிற வாகன ஓட்டுநர்களின் உயிருக்கும் ஆபத்தை விளைவிக்கிறது. இத்தகைய நடத்தை வீதிகளைப் பயன்படுத்தும் அனைவருக்கும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக வடிவமைக்கப்பட்ட விதிகளுக்கும் ஒழுங்குகளுக்கும் ஓட்டுநர்கள் கட்டுப்படாதிருப்பதைக் காட்டுகிறது.

பல விபத்துகளுக்குப் பங்களிக்கும் மற்றொரு காரணி வாகனம் ஓட்டும் போது செல்லிடப் பேசிகளைப் பயன்படுத்துவது ஆகும். அதன் மூலம் கவனச்சிதறல் ஏற்பட்டு விபத்துகள் சம்பவிக்கின்றன. பல வாகன ஓட்டுநர்கள் கைப்பேசிகளில் குறுஞ்செய்தி அனுப்புவதுடன், அழைப்புகளையும் ஏற்படுத்துகின்றனர். சிலர் சமூக ஊடகங்களைக்கூடப் பயன்படுத்துகின்றனர். அத்தகையவர்களின் சில வினாடிகள் கவனக்குறைவு பேரழிவு தரும் விபத்துகளுக்கு வழிவகுக்கின்றன. ஆனால் பல ஓட்டுநர்கள் அத்தகைய ஆபத்தைக் குறைத்து மதிப்பிடுகின்றனர். இதேபோல், மீண்டும் மீண்டும் விழிப்புணர்வு பிரசாரங்கள் மற்றும் கடுமையான தண்டனைகள் இருந்தபோதிலும், போதையில் வாகனம் ஓட்டுதல் மற்றும் போதைப்பொருள்களின் செல்வாக்கின் கீழ் வாகனம் ஓட்டுதல் ஆகியவை தொடர்ந்தும் உயிர்களைக் கொல்கின்றன.

கவனக்குறைவாக வாகனம் ஓட்டுவதால் பாதசாரிகளின் பாதுகாப்பும் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. பல பெரு நகரங்கள் மற்றும் சிறு நகரங்களில், பாதசாரிகள் கடக்கும் பாதைகள் மற்றும் போக்குவரத்து சமிக்ஞை விளக்குகளை புறக்கணிக்கும் ஓட்டுநர்கள் காரணமாக சாலைகளைக் கடக்கும்போது பாதசாரிகள் தங்கள் உயிரைப் பணயம் வைக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். பாடசாலைக் குழந்தைகள் மற்றும் முதியவர்கள் பெரும்பாலும் இத்தகைய அலட்சியத்தால் பாதிக்கப்படுகின்றனர். மேலும், பல வாகனங்கள் சாலைப் பயணத்திற்கு ஏற்ற நிலையில் பராமரிக்கத் தவறிவிடப்படுவதால் அது இயந்திர செயலிழப்புகளுக்கு வழிகோலி விபத்துகளை ஏற்படுத்துகிறது.

வாகனம் ஓட்டும்போது தூங்குவது வீதி விபத்துகளை ஏற்படுத்தும் காரணங்களில் ஒன்றாகும். ஓட்டுநர்கள் மயக்கம் அடையும்போது, அவர்களின் எதிர்வினை நேரம் மெதுவாகி, வாகனத்தின் மீதான கட்டுப்பாட்டை இழக்க நேரிடும். வாகனம் ஓட்டும்போது சில வினாடிகள் தூங்குவது கடுமையான விபத்துகள், காயங்கள் மற்றும் உயிரிழப்புக்கு வழிவகுக்கும். நீண்ட நேரம் வாகனம் ஓட்டுதல், ஓய்வின்மை மற்றும் சோர்வைப் புறக்கணித்தல் ஆகியவை இத்தகைய சம்பவங்களுக்கு முக்கிய காரணங்களாகும். ஓட்டுநர்கள் பயணங்களுக்கிடையே சரியான இடைவெளிகளை எடுக்க வேண்டும். நீண்ட பயணங்களுக்கு முன் நன்றாக தூங்குவதோடு, சோர்வாக இருக்கும்போது வாகனம் ஓட்டுவதைத் தவிர்க்க வேண்டும். விழிப்புணர்வும் பொறுப்பும் பல உயிர்களைக் காப்பாற்றும். விழிப்புடன் இருப்பதும் பாதுகாப்பான வாகனம் ஓட்டுதலும் விபத்துத் தடுப்பிற்கு முக்கியமாகும்.

இந்த விபத்துகளின் விளைவுகள் மிகவும் பாரதூரமானவை. அன்புக்குரியவர்களின் திடீர் இழப்பால் குடும்பங்கள் நிலைகுலைந்து செல்கின்றன. அதே நேரத்தில் உயிர் பிழைத்தவர்கள் பெரும்பாலும் நீண்டகால உடல் குறைபாடுகள் மற்றும் உளவியல் அதிர்ச்சியை எதிர்கொள்கின்றனர். பரந்த அளவில், மருத்துவச் செலவுகள், சொத்து சேதம் மற்றும் உற்பத்தித்திறன் இழப்பு காரணமாக நாடு பொருளாதார இழப்புகளைச் சந்திக்கிறது. அதிகரித்து வரும் விபத்துகள், சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கை பாதுகாப்பான பயண இடம் என்ற விம்பத்தையும் கெடுக்கின்றன.

இந்த நெருக்கடியைச் சமாளிக்க, பன்முக அணுகுமுறை அவசியம். அதிக அபராதங்கள் மற்றும் பொறுப்பற்ற ஓட்டுநர்களுக்கு உடனடியாக ஓட்டுநர் உரிமம் இரத்து உள்ளிட்ட போக்குவரத்துச் சட்டங்களை கடுமையாக அமுல்படுத்துவது ஓட்டுநர்களின் கவனக்குறைவான நடத்தையைத் தடுக்கலாம். கண்காணிப்பு கேமராக்கள் மற்றும் தானியங்கி போக்குவரத்து முகாமைத்துவ அமைப்புகள் போன்ற நவீன தொழில்நுட்பங்கள் வீதிகளைத் திறம்பட கண்காணிப்பதற்கு ஏற்ற வகையில் விரிவுபடுத்தப்பட வேண்டும். பாடசாலைகள், ஊடகப் பிரசாரங்கள் மற்றும் சமூக மட்டத்திலான திட்டங்கள் அனைத்து வீதிப் பயனர்களிடையேயும் வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிக்கும் பழக்கத்தை வளர்க்க வேண்டும். வீதியில் செல்லும் ஒவ்வொரு உயிரும் முக்கியமானது என்பதை ஓட்டுநர்களுக்கு தொடர்ந்து நினைவூட்ட வேண்டும்.

தனிநபர்கள் பொறுப்புடன் செயற்படத் தொடங்கி, அதிகாரிகள் சட்ட அமுலாக்கத்தை வலுப்படுத்தாவிட்டால், விபத்துகள் மூலமான இறப்புகள் மற்றும் காயங்களை நாடு தொடர்ந்து காணவேண்டிய நிலை நீடிக்கும். வீதிப் பாதுகாப்பு என்பது வெறும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் சார்ந்த விஷயம் மட்டும் அல்ல அது ஒரு சமூகத்தின் விழுமியங்களின் பிரதிபலிப்புமாகும். ஒவ்வொரு இலங்கையரும் தங்களுக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் வீதிகளைப் பாதுகாப்பானதாக மாற்றுவதில் தங்கள் பங்கை அங்கீகரிக்க வேண்டும்.

என்றும் அன்புடன்
ஆசிரியர்

# Clean Sri Lanka தேசிய வேலைத்திட்டமும் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் ஆக்கபூர்வமான முன்னெடுப்புகளும்

இலங்கைத் திருநாட்டின் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் **Clean Sri Lanka** எனும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தினால் பல்வேறு வேலைத்திட்டங்கள் நாவிதன்வெளிப் பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அரசின் தூய்மையான இலங்கை தேசிய வேலைத்திட்டமானது இலங்கை அரசின் அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. நேர்மையாகவும் சுற்றுச்சூழல் ரீதியாகவும் நிலைபேறான தேசத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டதாக இத்திட்டம் அமைகின்றது. அனைத்து துறைகளிலும் தூய்மை மற்றும் புத்துணர்ச்சியை உருவாக்கவும், மக்களிடையே நேர்மை மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்தவும் வலியுறுத்துகின்றது. இத்திட்டமானது 03 உபபிரிவுகளைக் கொண்டது.

1. கிராமப்புற வறுமை ஒழிப்பு
2. டிஜிட்டல் பொருளாதாரம்
3. சுத்தமான இலங்கை (Clean Sri Lanka)

இந்தவகையில் கிராமப்புற வறுமை ஒழிப்பில் எமது பிரதேசத்தில் மத்திய முகாம்-02, மத்திய முகாம்-06 மற்றும் சாளம்பைக்கேணி-05 ஆகிய கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு அவற்றிற்கான வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. டிஜிட்டல் பொருளாதார வேலைத்திட்டத்தின் கீழ் நாட்டில் 25 மாவட்டங்களிலும் 25 பிரதேச செயலகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அந்தவகையில் அம்பாரை மாவட்டத்திற்கான பிரதேச செயலகமாக எமது நாவிதன்வெளி பிரதேச செயலகம் தெரிவு செய்யப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். இத்திட்டத்தில் **e-Reception, Nutrition Voucher App, e-Business Registration, e-SLIM, e-Lease, e-Pension, Mail Management Systam, ITMIS** போன்ற வேலைத்திட்டங்கள் தேசிய அளவிலும் எமது பிரதேச செயலகத்திற்கு உரித்தான வகையிலும் மேற்கொள்ளப்படுகின்றன.

சுத்தமான இலங்கை (Clean Sri Lanka) வேலைத் திட்டத்தின் கீழ் எமது நாவிதன்வெளி பிரதேச செயலாளரினால் இத்திட்டம் தொடர்பான அறிவூட்டல் கருத்தரங்குகள் எமது பிரிவில் காணப்படும் சகல திணைக்களங்களின் உத்தியோகத்தர்களுக்கும் நடாத்தப்பட்டுள்ளன. மேலும் கிராம மட்டத்தில் காணப்படுகின்ற கிராம அபிவிருத்தி சங்கங்கள், மகளிர் கிராம அபிவிருத்தி சங்கங்கள், சமுதாய அமைப்புகள், இளைஞர் கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் வணக்க ஸ்தலங்களின் பிரதிநிதிகள் போன்றவர்களை அழைத்து அவர்களுக்கும் இத்திட்டம் தொடர்பான அறிவூட்டம் வழங்கப்பட்டு இத்திட்டத்தினை ஒவ்வொரு குடும்பங்களில் இருந்தும் ஆரம்பிப்பது தொடர்பில் நடிவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வேலைத்திட்டங்கள் யாவும் நான்கு பிரதான பகுதிகளாகவும் பல உப பிரிவுகளாகவும் வகுக்கப்பட்டு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஏனைய திணைக்களங்கள் மற்றும் சமூகமட்ட அமைப்புக்களினால்

கண்காணிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன. அவையாவன,

1. காரியாலய உள்ளக செயற்பாடுகள்

2. கிராமங்கள் தோறும் தூய்மையான இலங்கை வேலைத்திட்டத்தை அமுல்படுத்தும் நோக்குடனான சமூகமட்ட அமைப்புகள் மூலமாக நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டங்கள்

3. உற்பத்தித் திறன் தொடர்பான அடைவுமட்டத்தை மதிப்பீடு செய்வதற்காக துறைசார் வெளிக்கள உத்தியோகத்தர்களால் முன்வைக்கப்பட்ட வேலைத்திட்டங்கள்

4. 05 வருடங்களில் வழங்கப்பட்ட வாழ்வாதார திட்டங்களின் மதிப்பீட்டு வேலைத்திட்டம்

இந்நான்கு பிரதான வேலைத்திட்டங்களும் பின்வரும் அடிப்படையில் பல உப வேலைத்திட்டங்களை உள்ளடக்கியதாக நன்கு திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

## காரியாலய உள்ளக செயற்பாடுகள்

பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் உரிய நேரத்திற்கான வருகையும் கையொப்பமிடலும், அதேபோல் மதியபோசன இடைவேளையை ஒழுங்கமைத்தல், கோவை முகாமைத்துவம், காலை மற்றும் மதிய போசன உணவினை உரிய இடத்தில் உண்ணுவதன் மூலம் உள்ளக சுத்தத்தைப் பேணல், வெளிப்புற சூழலை பசுமையாக வைத்திருத்தல், கழிவு முகாமைத்துவம், அலுவலக சீருடை மற்றும் அலுவலக உடை போன்றவற்றில் நேர்த்தியைப் பேணல், கடிதங்களுக்கு உரிய நேரத்திற்கு பதில் அளித்தல், பொதுமக்களுடன் ஆரோக்கியமான உறவினைப் பேணல், சேவை முன்னடைவிற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்துதல், முன்னரங்க வேலைத்திட்ட முகாமைத்துவம் போன்றன சிறந்த முறையில் நடைமுறைப்பட்டு வருகின்றன.

## கிராமங்கள் தோறும் தூய்மையான இலங்கை வேலைத்திட்டத்தை அமுல் படுத்தும் நோக்குடன் சமூகமட்ட அமைப்புகள் மூலமாக நடைமுறைப் படுத்தப்படும் வேலைத்திட்டங்கள்

இவ்வேலைத்திட்டத்தினை மேற்கொள்ளும் பொருட்டு எமது பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் 20 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு 20 இணைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு அவர்களின் மேற்பார்வையின் கீழ் 20 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் 91 வலயங்களாக பிரிக்கப்பட்டு அவற்றிற்கு 91 வெளிக்கள உத்தியோகத்தர்கள் பொறுப்பானவர்களாக நியமிக்கப் பட்டுள்ளனர். இவர்கள் யாவரும் தங்களது வலயங்களில் காணப்படும் சமூக அமைப்புக்களுடன் தொடர்புபட்டு அவர்களை குழுத்தலைவர்களாக தெரிவு செய்து அவர்களுக்கு குறிப்பிட்ட வீட்டுக்கூறுகள், வணக்க ஸ்தலங்கள், திணைக்களங்கள், பாடசாலைகள், வெற்றுக்காணிகள், வீதிகள், நீர்ப்பாசன வாய்க்கால்கள், பொது மயானங்கள் மற்றும் வடிகான்கள் போன்ற அனைத்து கூறுகளுக்கும் பொறுப்புள்ளவர்களாக மாற்றி அவர்கள் மூலமாகவே சிரமதானங்கள், திண்மக் கழிவகற்றல் நடவடிக்கைகள், சுத்தம் பேணல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், தங்களால் தீர்க்கப்பட முடியாத பிரச்சினைகளும் இனங்காணப்பட்டுள்ளன. இவை யாவும் பொறுப்பாக்கப்பட்ட உத்தியோகத்தர்களினால் 03 வகையாக பிரிக்கப்படுகின்றன.

- கிராம மட்டத்தில் தீர்த்துக் கொள்ளப்பட வேண்டியவை
- பிரதேச செயலக மட்டத்தில் தீர்த்துக் கொள்ளப்பட வேண்டியவை
- ஏனைய வெளித் திணைக்களங்களோடு தொடர்புபட்டு நிதி ஒதுக்கீடுகள் மூலம் தீர்த்துக் கொள்ளப்பட வேண்டியவை

இவ்வாறாக மேற்குறித்த செயற்திட்டம் கிராம மட்ட அமைப்புகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## உற்பத்தித் திறன் தொடர்பான அடைவு மட்டத்தை மதிப்பீடு செய்வதற்காக துறைசார் வெளிக்கள உத்தியோகத்தர்களால் முன்வைக்கப்பட்ட Clean Sri Lanka வேலைத்திட்டங்கள்

எமது பிரதேச செயலகத்தில் கடமை புரியும் துறைசார் வெளிக்கள உத்தியோகத்தர்கள் தங்கள் துறையோடு தொடர்புடைய பல செயற்திட்டங்களை முன்வைத்துள்ளனர். இச்செயற்திட்டங்கள் யாவும் Clean Sri Lanka வேலைத்திட்டத்தை வலுவுள்ளவையாக மாற்றும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### 01. செயற்றிட்டத்தின் பெயர்:

அரச கட்டடங்களின் பராமரிப்பு

### செயற்பாட்டு முறைமை:

அரச நிதி மூலம் கட்டப்பட்ட கட்டடங்கள் மற்றும் சுற்றுச்சூழல் பராமரிப்பு

இங்கு கிராம மட்ட உத்தியோகத்தர்களின் காரியாலயங்களின் சுத்தம் மற்றும் பராமரிப்பு போன்ற விடயங்களில் அதிக கவனம் கொள்ளப்படுகின்றது.

### பொறுப்பு வாய்ந்த அதிகாரி:

திரு. சிவானந்தம் - அபிவிருத்தி உத்தியோகத்தர்

### 02. செயற்றிட்டத்தின் பெயர்:

சமுர்த்தி சமுதாய அமைப்புகளின் செயற்பாடு

### செயற்பாட்டு முறைமை:

சுமார் 86 சமுதாய அமைப்புகளின் ஊடாக குறிப்பிட்ட பகுதிகளில் சிரமதானம், சிறிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு, மரநடுகைகள் என்பன மேற்கொள்ளப்பட்டு குறிப்பிட்ட பிரதேசத்தை எழில் மிக்க இடமாக மாற்றுதல்.

### பொறுப்பு வாய்ந்த அதிகாரி:

திருமதி. அஸ்கா - அபிவிருத்தி உத்தியோகத்தர்

### 03. செயற்றிட்டத்தின் பெயர்:

சமய ஸ்தலங்களின் சுத்தம் மற்றும் அவற்றின் பராமரிப்பு செயற்பாடு.

### செயற்பாட்டு முறைமை:

சுமார் 27 கோவில்கள், 17 பள்ளிவாசல்கள், 03 கிறிஸ்தவ ஆலயங்கள், 01 விகாரை என பல்லின மக்களின் வணக்க ஸ்தலங்கள் காணப்படுகின்றன. இவை யாவும் கண்காணிக்கப்பட்டு வர்ணம் பூசுதல், சிரமதானப்பணிகள், மரநடுகை போன்ற செயற்பாடுகள் மூலம் எழில்மிகு மத ஸ்தலங்களாக மாற்றுதல்.

### பொறுப்பு வாய்ந்த அதிகாரி:

கலாசார உத்தியோகத்தர்கள்

### 04. செயற்றிட்டத்தின் பெயர்:

அரிசி மற்றும் மர ஆலைகள், கைத்தொழில் நிலையங்களின் சுத்தம் மற்றும் பராமரிப்புச் செயற்பாடு

### செயற்பாட்டு முறைமை:

நாவிதன்வெளி பிரதேசத்திற்குட்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலைகள், மேற்பார்வை செய்யப்பட்டு சுத்தமான பிரதேசமாக மாற்றுதல். இவற்றின் பதிவு மற்றும் ஏனைய நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்.

மர ஆலைகளினதும் கைத்தொழில் நிலையங்களினதும் சுற்றுப்புறச் சூழல் மற்றும் அதன் கழிவு முகாமைத்துவம் என்பன தொடர்பாக கண்காணிக்கப்பட்டு குறைபாடுகள் இனங்காணப்பட்டு சீராக்கம் செய்யப்பட்டு சுத்தமான நிலையில் வைத்திருத்தல்.

### பொறுப்பு வாய்ந்த அதிகாரி:

கலாசார உத்தியோகத்தர்கள்

### 05. செயற்றிட்டத்தின் பெயர்:

விவசாய அமைப்புகளுக்கும் விவசாயிகளுக்கும் அவர்களால் பயன்படுத்தபடும் கிருமி நாசினிகள், களை கொல்லிகள் இரசாயன உரப்பாவனை தொடர்பாக விழிப்புணர்வை எற்படுத்தல்.

### செயற்பாட்டு முறைமை:

விவசாய வடிச்சல் வாய்க்கால் அதனை அண்டிய பகுதிகளில் காணப்படும் நஞ்சுப் போத்தல்கள் மற்றும் உரக்கழிவுகளை கால்வாய்களில் இடுவதை தவிர்த்தல், சுற்றாடலுக்கு பொருத்தமான உர மற்றும் கிருமி நாசினி தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகளை முன்னெடுத்தல்.

### பொறுப்பு வாய்ந்த அதிகாரி:

விவசாய திணைக்கள உத்தியோகத்தர்களுடன் இணைந்து பிரதேச செயலகத்தில் இணைக்கப்பட்டுள்ள விவசாயத்திற்கு பொறுப்பு வாய்ந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.

### 06. செயற்றிட்டத்தின் பெயர்:

வியாபார நிலையங்களின் பதிவு மற்றும் சீராக்கல் செயற்பாடு.

### செயற்பாட்டு முறைமை:

நாவிதன்வெளி பிரதேச எல்லைக்குள் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு பிரதேச சபையினால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. எனினும் பிரதேச செயலகத்தில் வியாபார பதிவினை மேற்கொள்வதில் குறிப்பாக காணி உரிமம் பெறுவதில் சில சிக்கல்கள் காணப்பட்டன. இவற்றை தீர்த்துக் கொடுத்தல். பதிவு செய்யப்பட்ட வியாபார நிலையங்களின் பெயர்ப் பலகை மற்றும் அதன் சுற்றுப்புறச் சூழல், சுத்தம் போன்ற விடயங்கள் தொடர்ச்சியாக கண்காணிக்கப்படல்.

### பொறுப்பு வாய்ந்த அதிகாரி:

அபிவிருத்தி இணைப்பாளர்

### 07. செயற்றிட்டத்தின் பெயர்:

பாலர் பாடசாலைகளின் சுத்தம் மற்றும் பராமரிப்பு

### செயற்பாட்டு முறைமை:

பாலர் பாடசாலைகளின் சுற்றுச்சூழல் அதன் சுத்தம் உணவு விநியோகம் போன்ற விடயங்கள் கண்காணிக்கப்படல்.

### பொறுப்பு வாய்ந்த அதிகாரி:

அபிவிருத்தி இணைப்பாளர்

### 08. செயற்றிட்டத்தின் பெயர்:

இளைஞர் கழகங்களின் செயற்பாடுகள் தொடர்பான கள அறிக்கை.

### செயற்பாட்டு முறைமை:

கிராமத்தில் உள்ள இளைஞர் கழகங்களின் ஆக்க பூர்வமான செயற்பாடுகளை பெற்றுக் கொள்ளல். அனர்த்த நிலைமைகளின் போது பங்கு கொள்ள பயிற்சி அளித்தல்.

### பொறுப்பு வாய்ந்த அதிகாரி:

தொழில்சார் பயிற்சிகளை வழங்கல். இளைஞர் சேவை உத்தியோகத்தர்

### 09. செயற்றிட்டத்தின் பெயர்:

விளையாட்டு கழகங்கள், மற்றும் மைதான பராமரிப்பு தொடர்பான வேலைத் திட்டங்கள்.

### செயற்பாட்டு முறைமை:

விளையாட்டு கழகங்களின் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை பெற்றுக்கொள்ளல், விளையாட்டு கழகங்களின் உள்ளக முரண்பாடுகளை தீர்த்து வைத்தல்.

கிராமத்தில் உள்ள திறமை வாய்ந்த இளைஞர்களை இனங்கண்டு மாவட்ட மாகாண தேசியப் போட்டிகளுக்கு இணைத்துக் கொள்ள பயிற்சி வழங்குதல்.

### பொறுப்பு வாய்ந்த அதிகாரி:

விளையாட்டு உத்தியோகத்தர்

### 10. செயற்றிட்டத்தின் பெயர்:

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான நடவடிக்கைகள்.

### செயற்பாட்டு முறைமை:

அனர்த்த விளைவுகளை தவிர்த்தல் தொடர்பான பாடசாலை மாணவர்களுக்கு சுவரொட்டி தயாரிக்கும் போட்டிகளை நடாத்துதல்.

### பொறுப்பு வாய்ந்த அதிகாரி:

அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர்

## 11. செயற்றிட்டத்தின் பெயர்:

பாடசாலை தொழிற் பயிற்சி நிலையங்கள் போன்றவற்றில் சுத்தமான இலங்கை வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

### செயற்பாட்டு முறைமை:

பாடசாலை மற்றும் தொழிற்பயிற்சி நிலையம் போன்றவற்றில் விழிப்புணர்வு கருத்தரங்கு, சிரமதானம், மரநடுகை போன்றவற்றின் ஊடாக மாணவர்களை பொறுப்பு மிக்கவர்களாக உருவாக்குதல்.

### பொறுப்பு வாய்ந்த அதிகாரி:

மனிதவள அபிவிருத்தி மற்றும் திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்

## 12. செயற்றிட்டத்தின் பெயர்:

சிறுவர் அமைப்புகள் ஊடாக தூய்மையான இலங்கை வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

### செயற்பாட்டு முறைமை:

சிறுவர் கழகங்களுக்கு தூய்மையான இலங்கை வேலைத்திட்டம் தொடர்பாக விழிப்புணர்வு வழங்குதல் பாடசாலை மற்றும் தங்களது கிராமங்களில் சிரமதான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

மர நடுகை வேலைத் திட்டங்களை முன்னெடுத்தல்.

### பொறுப்புவாய்ந்த அதிகாரி:

சிறுவர் பிரிவு உத்தியோகத்தர்கள்.

## 13. செயற்றிட்டத்தின் பெயர்:

பெண்கள் அமைப்புகள் ஊடாக சுத்தமான இலங்கை வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

### செயற்பாட்டு முறைமை:

வருமானம் ஈட்டும் பெண் முயற்சியாளர்களை கூட்டுறவு சங்கமாக பதிவு செய்து சுயமாக இயங்குவதற்கு வலுவூட்டல்.

முன்மாதிரியான பெண் தொழில் முயற்சியாளர்களை உருவாக்குவதன் மூலம் சுத்தமான இலங்கை செயற்திட்டத்தில் பொறுப்பு வாய்ந்தவர்களாக மாற்றுதல்.

### பொறுப்பு வாய்ந்த அதிகாரி:

பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்

## 14. செயற்றிட்டத்தின் பெயர்:

அரச தொழில் திணைக்களங்களின் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

### செயற்பாட்டு முறைமை:

நாவிதன்வெளி-02 மத்தியமுகாம்-03 மற்றும் சாளம்பைக்கேணி-01 ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள நெசவு கைத்தொழில் நிலையங்களை 5S திட்டத்தின் கீழ் செயற்படுத்துதல், அதன் கழிவு முகாமைத்துவத்தைப் பேணல் மற்றும் அதன் சுற்றுச் சூழலை பாதுகாத்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

### பொறுப்புவாய்ந்த அதிகாரி:

பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்

## 15. செயற்றிட்டத்தின் பெயர்:

முதியோர் சங்கங்கள் ஊடான தூய்மையான இலங்கை வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

### செயற்பாட்டு முறைமை:

முதியோர்களுக்கு விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடாத்தி கிராமங்களை சுத்தமாக மாற்றுதல்.

### பொறுப்பு வாய்ந்த அதிகாரி:

முதியோர் அபிவிருத்தி உத்தியோகத்தர்

## 16. செயற்றிட்டத்தின் பெயர்:

காணிப் பத்திரம் வழங்கப்பட்டு கைவிடப்பட்ட காணிகளை கைவசப்படுத்தும் வேலைத் திட்டம்.

### செயற்பாட்டு முறைமை:

பராமரிப்பற்ற காணிகளின் உரிமையாளர்களை இனங்கண்டு அக்காணிகளைப் பராமரிப்பு தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், அவ்வாறு தொடராக பராமரிப்பற்று காணப்படும் காணிகளை அரசுடைமையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல். இந்நடவடிக்கையின் முதற்கட்டமாக ஒரு வட்டாரத்தில் மேற்கொள்ளப்பட்டு வெற்றியளிக்கும் பட்சத்தில் அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் நடைமுறைப்படுத்தல்.

### பொறுப்புவாய்ந்த அதிகாரி:

குடியேற்ற உத்தியோகத்தர்

## 17. செயற்றிட்டத்தின் பெயர்:

20 சங்கங்கள் ஊடான, 20 வேலைத்திட்டங்கள்.

### செயற்பாட்டு முறைமை:

வெளிநாட்டு வேலைவாய்ப்பு திணைக்களத்தின் மூலம் உருவாக்கப்பட்ட கிராம மட்ட சங்கங்களின் ஊடாக ஒவ்வொரு கிராமத்திற்கும் செயற்றிட்டம் இனங்காணப்பட்டு நடைமுறைப்படுத்தல்.

### பொறுப்பு வாய்ந்த அதிகாரி:

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்

## 05 வருடங்களில் வழங்கப்பட்ட வாழ்வாதார திட்டங்களின் மதிப்பீட்டு வேலைத்திட்டம்









இவ்வேலைத்திட்டமானது கடந்த 05 வருட காலங்களில் அதாவது 2021ஆம் ஆண்டு தொடக்கம் 2025ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டுள்ள வாழ்வாதாரத் திட்டங்களின் தற்போதைய முன்னேற்றங்கள் தொடர்பில் அறியும் பொருட்டு 20 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் அதற்கென உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு சகல பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் மதிப்பீடு செய்யப்பட்டு அவை தொடர்பான குறைபாடுகள் இனங்காணப்பட்டு சீர் செய்வதற்கான ஆலோசனைகள் வழங்கப்படும் அதே வேளை ஆவணமாக்கல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**தொகுப்பு :**

**திட்டமிடல் பிரிவு**
**பிரதேச செயலகம்**
**நாவிதன்வெளி**

கடந்த மாத இதழின் தொடர்ச்சி...

# கிராம அபிவிருத்தி திட்டத்தினை (VDP) தயாரித்தல்





ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக தெரிவு செய்யப்பட்ட வறுமைக்குட்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மட்டுமல்லாது பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கும் கிராம அபிவிருத்தி திட்டம் தயாரிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவில் கிராம அபிவிருத்தி திட்டம் தயாரிப்பதற்கான பயிற்சி பட்டறை பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு கடந்த 2025.04.09ஆம் திகதி நடாத்தப்பட்டது. அம்பாறை மாவட்ட செயலகத்தினால் பயிற்சியளிக்கப்பட்ட பிரதேச செயலக பிரதி பணிப்பாளர் திட்டமிடல் மற்றும் விடய உத்தியோகத்தர் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டு பயிற்சி பட்டறையை நடாத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மக்கள் பிரதிநிதிகள், அரச உத்தியோகத்தர்கள், மக்கள் அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் இளஞ் செயற்பாட்டாளர்கள் உட்பட்ட மக்களைக் கொண்ட கிராமக்குழு ஒன்றினூடாக (வறுமை ஒழிப்புக்கான தேசிய இயக்கத்தினூடாக நிறுவப்பட்ட சமூக மேம்பாட்டுச் சபை “Community Development Council” ஊடாக கிராம அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும்.

கிராம அபிவிருத்தித் திட்டத்தினை தயாரிக்கும் போது சென்ற மாத மின்னிதழ் கட்டுரையின் இலக்கம் 07இல் குறிப்பிடப்பட்ட துறைகள் உள்ளடங்கியுள்ளதன் பிரகாரம் கருதிட்டங்களை இனங்காணல் அவசியமாகும்.

அவ்வாறு இனங்காணப்படும் கருத்திட்ட முன்மொழிவுகள் ஒவ்வொரு துறைக்கேற்ப ஒதுக்காது ஒட்டுமொத்த முன்னுரிமை அடிப்படையில் அணிதிரட்டி கிராம அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடக்கப்படல் வேண்டும். இனங்காணப்பட்ட பிரிவுக்குரியதாக ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ள கிராம அபிவிருத்தித் திட்டத்தினை மீளாய்வு செய்து இற்றைப்படுத்துவது போதுமானதாகும்.

உத்தேச வேலைத்திட்டம் தொடர்பிலும், உத்தியோகத்தர்களின் மற்றும் கிராமியக் குழுவின் கடமைப் பொறுப்புகள் தொடர்பிலும் உரிய தரப்பினருக்கு முன்கூட்டியே விளக்கமளிக்கப்படல் வேண்டும்.

கிராம அபிவிருத்தி திட்டம் தயாரிப்பதற்கு கிராமிய பங்கேற்பு அணுகுமுறையுடனான முறைமையின் ஊடாக செய்வதற்காக பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. நாவிதன்வெளி பிரதேச செயலாளரின் அறிவுறுத்தலுக்கு அமைய பிரதி திட்டமிடல் பணிப்பாளர் அவர்களின் வழிகாட்டலின் கீழ் சிரேஸ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி இணைப்பு உத்தியோகத்தரின் தலைமையின் கீழ் குழுக்களாக பிரித்து கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக (PRA) நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டமை முக்கிய அம்சமாகும்.

## கிராமப்புற மதிப்பீட்டில் பங்கேற்பு

கிராமிய பங்கேற்பு ஆய்வு (PRA) என்பது துரித கிராமிய மதிப்பீடு (Rapid Rural Appraisal) முறையிலிருந்து தோற்றம் பெற்றதாகும். பங்கேற்புடனான கிராமிய

ஆய்வு என்பது (PRA) பல்வேறு விதமான பங்கேற்பு முறைகளை உள்ளடக்கிய கருவிகளின் பெட்டகமாகும். பொருத்தமான தேவையான கருவிகளைப் பயன்படுத்தி கிராமம் பற்றிய ஒரு முழுமையான மதிப்பீட்டை பங்கேற்பு ரீதியில் மேற்கொள்ளும் ஒரு செயற்பாடாகும்.

கிராமிய மக்களை ஊக்குவித்து கிராமத்தின் அபிவிருத்தி செயற்பாட்டின் சகல படிநிலைகளிலும் அவர்களை பொறுப்பை ஏற்பவர்களாகவும், அதற்கு பதில் கூறுபவர்களாகவும் மாற்ற ஊக்குவிக்கும் மக்களை மையமாகக் கொண்ட ஒரு செயற்பாடாகும்.

(PRA) ஆனது பயிற்றப்பட்ட பல்துறைசார் உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய குழுவின் வழிகாட்டலுடன் கிராமத்தின் மக்களை மையமாகக் கொண்டு சில செய்முறைகளின் ஊடாக அவர்களை ஈடுபடுத்தி அவர்களுக்கான தேவைகளையும், வளங்களையும் இனம் கண்டு அவற்றிக்கான தீர்வுகளையும், பயன்பாடுகளையும் இனங்காண கிராம மக்களை ஒன்றுபட வைத்து ஊக்குவிக்கும் செயற்பாடாகும்.

## PRA இன் அடிப்படை கொள்கைகள்

* பங்கேற்றல் (Participation)
* குழு வேலை (Team Work)
* பலமூட்டல்
* இணைந்து கற்றல்
* வெளிப்படைத்தன்மை
* உரையாடல்
* யதார்த்தத்தை கட்டியெழுப்புதல்
* விட்டுக் கொடுத்தல்
* மாறுபாடுகளை மதித்தல்

## PRA இன் மதிப்பீட்டுக் கருவிகள்

கிராம அபிவிருத்தியில் PRA மதிப்பீட்டுக் கருவிகளைக் கொண்டு எட்டப்படுகின்ற முடிவுகளைக் கொண்டு தயாரிக்கப்படும் கிராம அபிவிருத்தி திட்டமானது பயனுள்ளதும் தரமானதுமாகும். உலகில் நிபுணர்களால் கண்டு பிடிக்கப்பட்டு அடையாளப்படுத்தப்பட்ட 12 மதிப்பீட்டுக் கருவிகள் உள்ளன. அவையாவன,



1. வள வரைபடம் (Resource Mapping)
2. கால நாட்காட்டி (Seasonal Calendar)
3. வரலாற்று குறுக்குவெட்டு (Historical Transect)
4. வென் வரிப்படம்
5. நாளாந்த நடத்தைக் குறிப்பு
6. சொத்துக்களை வகைப்படுத்தல்
7. செலவுச்சட்டகம்
8. தீர்மானம் எடுக்கும் வரைபடம்
9. அரைவட்ட கட்டமைக்கப்பட்ட கலந்துரையாடல்
10. குறுக்கு நடை
11. பிரச்சினை மரம்
12. சோடியாக ஒப்பிடல்

மேற்குறிப்பிடப்பட்ட 12 மதிப்பீட்டுக் கருவிகளில் 05 மதிப்பீட்டுக் கருவிகளைக் கொண்டு நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவில் PRA செய்யப்பட்டது. இதனடிப்படையில் கீழ் வரும் 05 மதிப்பீட்டுக் கருவிகள் மூலம் பெறப்பட்ட பெறுபேறுகள் கிராம அபிவிருத்தி திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1. வள வரைபடம் (Resource Mapping)
2. கால நாட்காட்டி (Seasonal Calendar)
3. வரலாற்று குறுக்குவெட்டு (Historical Transect)
4. குறுக்கு நடை
5. சோடியாக ஒப்பிடல்

தொடரும்...

தொகுப்பு:
எம்.எச். ஜலிலா
அபிவிருத்தி உத்தியோகத்தர்

மேற்பார்வை மற்றும் வழிகாட்டல்:
எம்.ஐ. அலியார்
சிரேஸ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்



சிறுகதை

# நினைப்பதெல்லாம் நல்லதற்கே

பா.மதுஷா
கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை

அது ஒரு அழகிய பூஞ்சோலைக் கிராமம். எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேலென செழிப்பாகத் தெரியும் கிராமம். அக்கிராமத்தில் சோற்றுக்குக் கூட வழியில்லாத குடும்பத்தில் கந்தன் என்னும் ஏழை குடியானவன் ஒருவன் வாழ்ந்து வந்தான். இவனோ பாவம். தங்கை இருவர். தந்தையோ ஒரு ஊனமுற்றவர். தாயோ குடும்பக் கஷ்டத்தை கவனத்திற்கொண்டு வீடு வீடாய் கூலி வேலை செய்து திரிந்தாள். தன் தங்கைகள் எப்படியாவது ஒரு நல்ல நிலைக்கு வர வேண்டும் என ஆவல் கொண்டவன் கந்தன். ஆனால் தாயோ தனது பிள்ளை கந்தன் படித்து நல்ல நிலைக்க வரவேண்டும் என ஆசை கொண்டவள்.

கந்தன் கல்விப் பொதுத்தராதர சாதாரண வகுப்பில் கல்வி கற்பவன். நல்ல கெட்டிக்காரன் வகுப்பில் அவனைப் பாராட்டாத ஆசிரியர்களே இல்லை. ஆனால் அவன் தனது குடும்பக் கஷ்டத்தைக் கவனத்திற் கொண்டு தனது படிப்பைக் கைவிட நினைத்தான். இதைத் தன் தாயிடம் கூறினான். தாய்க்குத் தன் தலையில் இடி விழுந்தது போல் இருந்தது. தனது ஆசை நம்பிக்கையில் மண்வாரிப் போட்டது போல இருந்தது. இதைத் தாயால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. "நான் வேலைக்குப் போவது கஷ்டப்படுவது எல்லாம் உனக்காகத்தான். நீ எப்படியாவது படி நான் எப்பாடு பட்டாலும் உன்னைப் படிப்பிக்கிறேன்" எனக் கூறி அழுதாள். தாயின் அழுகையை சகிக்க முடியாத கந்தன் தன் தாயின் விருப்பத்திற்கு உடன்பட்டான்.

வகுப்பில் கந்தனை விட யாருமே படிக்க மாட்டார்கள். கந்தன் திறமையானவன், நன்றாகப் படிப்பவன். எப்படியோ கல்விப் பொதுச் சாதாரண பரீட்சைக்கு தோற்றினான். சிறுவயதுக் கனவுகள் எல்லாம் நனவாகப் போகின்றதே என்ற சந்தோஷம் ஒரு புறம். தனது தாயின் விருப்பம் நிறைவேற்றப்படுகின்றதே என்ற சந்தோஷம் மறுபுறம். பரீட்சை முடிவுகள் வரும்வரை கந்தன் கூலித்தொழில் செய்தான். எப்படியோ மூன்று மாதங்கள் கடந்து பரீட்சை முடிவுகள் வெளிவந்தன. ஆம், எல்லோரும் எதிர்பார்த்த மாதிரி கந்தன் அனைத்துப் பாடங்களிலும் விசேடசித்தி பெற்று மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்றிருந்தான்.

கந்தனின் தாய்க்கும், குடும்பத்திற்கும், பாடசாலைக்கும், ஊர் மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சி. அத்துடன் பாடசாலையில் ஆசிரியர் ஒருவர் கந்தனின் குடும்ப நிலையைக் கவனத்திற் கொண்டு அவனுக்கு உதவ முன்வந்தார். எப்படியோ கந்தனின் குடும்ப வறுமையை கல்வித் திணைக்களத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தார். கல்வித் திணைக்களம் கந்தனின் கல்வியைப் பொறுப்பேற்றது. அத்துடன் கந்தனின் குடும்பத்திற்கும் உதவி செய்தது. அவனது குடும்பத்திற்கு கிடைக்கப்பெற்ற உதவிப்பணம் மூலம் அவனது இரு தங்கைகளும் கல்வி கற்க முன்வந்தனர். அத்துடன் கந்தன் தனது உயர் கல்வியை ஆரம்பித்தான்.

அவன் ஒரு நகரப் பாடசாலை ஒன்றில் சேர்ந்து கொண்டான். அவனுடைய வகுப்பில் புதிய நண்பர்களும் நிறைய உதவிகளும் கிடைத்தன. கந்தன் உயர் வகுப்பில் தனது திறமையைக் காட்டி வந்தான். கந்தனின் திறமையைக் கண்ட சில மாணவர்கள்

அவன் மீது கோபம் கொண்டு வெறுப்படைந்தனர். இதனால் கந்தனைத் தங்களுடைய எதிரியாகவே நினைத்தனர். ஆனால் கந்தனோ அவர்களை தன்னுடைய நண்பர்களாகவே கருதினான். கந்தனுடைய படிப்பை எப்படியாவது சீர்குலைக்க வேண்டும் என பல முயற்சிகளை செய்தனர். ஆகையால் அவன் பலவகையிலும் தாக்கப்பட்டிருந்தான்.

இவ்வாறு இருக்கையில் ஒரு நாள் கந்தன் வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த போது அங்கு அவன் கண்ட காட்சி அவனை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. ஆம்! அவனை எதிரியாக நினைத்து செயற்பட்ட அனைவரும் மதுபானம் அருந்தி விட்டு போதையில் வாகனத்தில் மோதிக் கிடந்தனர். அவர்களின் உடலில் இருந்து இரத்தம் வேகமாக வெளியேறிக் கொண்டிருந்தது. இதனைக் கண்ட கந்தன் அவசர அவசரமாகச் செயற்பட்டு அனைவரையும் வைத்தியசாலையில் சேர்த்தான். அவர்கள் அனைவரும் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டனர். வைத்தியர்களின் கடுமையான உழைப்பினால் அனைவரும் உயிர் பிழைத்தனர். கந்தன் தன் நண்பர்களின் வீடுகளில் அறிவித்து விட்டு அவர்கள் கூடவே இருந்தான். அவர்களுடைய குடும்பத்தார் வந்ததும் கந்தன் புறப்பட்டுச் சென்றான். தங்கள் தவறை உணர்ந்த கந்தனின் எதிரிகள் அவனிடம் மன்னிப்புக் கேட்டனர். அத்துடன் அவர்களுடன் நண்பர்களாயினான்.

எப்படியோ உயர்தரப் பரீட்சையும் வந்தது கந்தன் பரீட்சையை மிகச்சிறப்பாக எழுதினான். இந்நிலையில் தனது தாயின் உடல் நிலை மிக மோசமாக இருந்தது. எங்கு சென்றாலும் கந்தனது தாயைக் காப்பாற்ற முடியவில்லை. ஆகையால் அவள் படுத்த படுக்கை ஆகிவிட்டாள். கந்தனால் இதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இக்காலத்தில் உயர்தரப் பரீட்சை முடிவுகள் வெளிவந்தன. கந்தன் தனது மூன்று பாடங்களிலும் சித்தியடைந்து வைத்தியத்துறையில் பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்பட்டிருந்தான். கந்தனிடம் முதலில் பொறாமை கொண்டவர்கள் ஓரளவு சித்தியடைந்திருந்தனர். அவர்களுக்கு உற்சாகம் கொடுத்து எழுப்பி விட்டு பாடசாலையை விட்டுப் பிரிந்தான்.

தனது தாயின் உடல் நிலையைப் பார்த்த கந்தன் பல்கலைக்கழகம் செல்வதில்லை என முடிவெடுத்தான். எனினும் அனைவரது வற்புறுத்தலுக்கும் இணங்கி



பல்கலைக்கழகம் செல்லத்தயாரானான். தனது இரு தங்கைகளினதும் பொறுப்பில் தனது தாயை விட்டுச் சென்றான். பல்கலைக்கழகம் சென்றாலும் கந்தனால் தனது தாயை மறக்க முடியவில்லை. எனினும் ஐந்து வருட காலத்தில் மருத்துவத்துறையில் கல்வி கற்று வைத்தியராக பட்டமேற்று வெளிவந்தான். தனது தாயைப் பார்ப்பதற்காக ஓடோடி வந்தான். கந்தனுக்கு வந்ததும் வராததுமாய் ஓர் அதிர்ச்சி காத்திருந்தது.

அவனுடைய தாய் இறந்து ஒரு வருடம் ஆகிவிட்டது. அவனது வாய் புலம்பி அழுதது. கந்தனால் தனது தாயின் இழப்பை தாங்கிக் கொள்ள முடியவில்லை. தனது தாயின் ஆசையை நிறைவேற்றி பட்டம் பெற்று வைத்தியனாய் வந்திருந்தும் கந்தனைப் பார்க்க அவனது தாய் இல்லை. எனினும் தனது தாய்க்காக தினம் தினம் கண்ணீர் வடிக்கத் தவறியதில்லை. தாயின் மரணச் செய்தியை ஏன் எனக்கு சொல்லாமல் மறைத்தீர்கள் என்று தன் தங்கைகளைக் கடிந்து கொண்டான். "அம்மாக்கு முடியாமப் போன நேரம் நீங்க இறுதி வருட பரீட்சைக்கு தயாராவதாக கோல் எடுத்து கதைச்சத அம்மா கேட்டுட்டு இருந்தவ. அதால தனக்கு எது நடந்தாலும் அண்ணாவின் படிப்ப குழப்ப வேணாமென்று அம்மா எங்கள்ட்ட சத்தியம் வாங்கினவ" என்று சொல்லி அழுது தீர்த்தனர் இருவரும். கொஞ்சம் கொஞ்சமாக தன் துயரை மறந்து நகரமொன்றில் வைத்தியராக பணியேற்க தனது தங்கைகளுடனும், தனது ஊனமுற்ற தகப்பனுடனும் சென்றான் கந்தன்.

அவன் உள்ளமும் அவனது தாய் உள்ளமும் நல்லதை நினைத்ததால் அவனுக்கு நல்லதே நடந்தது. விதி மண்ணில் பிறக்கும் அனைவருக்கும் இறப்பை நிச்சயமாக்கிவிட்டது. அது தான் கந்தனின் தாய்க்கும் நடந்தது.

கடந்த மாத இதழின் தொடர்ச்சி...



# நினைவாற்றல் குறைபாடா? வயதின் விளைவா? மறதியின் பின்னணியில் உள்ள உண்மைகள்!

Compiled by:
Dr MBM. SILMY
(MBBS, MSLMA, MSLAGM)
MOIC/PMCU CHENAIKUDIYIRUPPU

மறதிநோய் (Dementia) என்பது மூளையின் செயல்பாடுகளைப் பாதிக்கும் பல நோய்களுக்கான பொதுவான சொல். இது ஒரு குறிப்பிட்ட நோய் அல்ல, மாறாக நினைவாற்றல், சிந்தனை மற்றும் நடத்தை ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்களைக் குறிக்கிறது. உலகளவில், Dementia பாதிப்பு வேகமாக அதிகரித்து வருகிறது, ஒவ்வொரு 4 வினாடிக்கும் ஒரு நோயாளி கண்டறியப்படுகிறார். இந்த எண்ணிக்கை 2050 இற்க்குள் 152 மில்லியனாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

வயதாகும் மக்கள் தொகை அதிகமாக உள்ள இலங்கையில் இதன் பாதிப்பு இன்னும் அதிகம். இது வெறும் மருத்துவப் பிரச்சினை மட்டுமல்ல, உலகளாவிய சுகாதார மற்றும் சமூகப் பொருளாதாரப் பிரச்சினையும் ஆகும்.

ஒரு நபர் தனது நினைவாற்றல், சிந்தனை மற்றும் முடிவெடுக்கும் திறன்களை இழக்கும் போது, அவரது சுதந்திரமான வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்படுகிறது. ஒரு கட்டத்தில், சாதாரண அன்றாட வேலைகளான சாப்பிடுவது, குளிப்பது, உடை அணிவது போன்ற அடிப்படைச் செயல்களுக்கும் பிறரின் உதவி தேவைப்படும். இது அவர்களது தன்னம்பிக்கையை முற்றிலுமாக சிதைத்து விடுகிறது.

மறதி நோயால் பாதிக்கப்பட்டவர்களைக் கவனித்துக் கொள்வது குடும்பத்தினருக்கு மிகப் பெரிய சவாலாக அமைகிறது. இது உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் அவர்களைப் பாதிக்கிறது. 24 மணி நேரமும் கவனித்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்போது, பல குடும்ப உறுப்பினர்கள் தங்கள் வேலைகளை விட்டுவிடவோ அல்லது தங்களின் தனிப்பட்ட வாழ்க்கையை முழுமையாக தியாகம் செய்யவோ நேரிடுகிறது.

மறதிநோய் பற்றிய புரிதல் குறைவாக இருப்பதால், பாதிக்கப்பட்டவர்கள் சமூகத்திலிருந்து விலக்கப்படுகிறார்கள். அவர்களின் குழப்பமான நடத்தைகள் அல்லது பேசும் விதம் பிறருக்கு சங்கடத்தை ஏற்படுத்தலாம். இதனால் அவர்கள் தனிமைப்படுத்தப்படுகிறார்கள். இது அவர்களின் மனநிலையை மேலும் மோசமடையச் செய்கிறது.

## மறதி நோயின் வகைகள்

மறதி நோய்க்கு பல வகைகள் உள்ளன. இவற்றில் மிகவும் பொதுவான நான்கு வகைகள்:

அல்சைமர் நோய் (Alzheimer's Disease) இது மிகவும் பொதுவான வகை. மூளையில் உள்ள நரம்பு செல்களில் குறிப்பிட்ட புரதங்கள் படிவதால் ஏற்படுகிறது.

இரத்தநாள மறதிநோய்(Vascular Dementia) மூளைக்குச் செல்லும் இரத்த நாளங்கள் சேதமடைவதால் இது ஏற்படுகிறது.

லூயி உடல் மறதிநோய் (Lewy Body Dementia) மூளையில் லூயி உடல்கள் எனப்படும் அசாதாரண புரதப் படிவுகள் உருவாவதால் ஏற்படுகிறது.

ஃப்ரண்டோடெம்போரல் மறதிநோய் (Frontotemporal Dementia) மூளையின் முன் மற்றும் பக்கவாட்டுப் பகுதிகளை (frontal and temporal lobes) பாதிப்பதால் நடத்தை மற்றும் ஆளுமை மாற்றங்கள் ஏற்படும்.

ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட வகை மறதிநோய்கள் இருந்தால், அது கலப்பு மறதிநோய்(mixed dementia) என்று அழைக்கப்படுகிறது.

## அறிகுறிகள்

மறதிநோய் ஒவ்வொரு நபருக்கும் வெவ்வேறு விதமாக வெளிப்படும். எனினும், பொதுவாகக் காணப்படும் அறிகுறிகள்:

**நினைவாற்றல் பிரச்சினைகள்:** புதிதாக அறிந்த தகவலை மறந்துவிடுதல், பழக்கமான இடங்களில் தொலைந்து போதல், மற்றும் பொருள்களைத் தவறான இடங்களில் வைத்தல்.

**அறிவாற்றல் திறன் குறைதல்:** கவனம் செலுத்துவதில் சிரமம், நேரம் மற்றும் இடத்தைப் புரிந்து கொள்வதில் குழப்பம், மற்றும் முடிவெடுப்பதில் சிக்கல்கள். உதாரணமாக, ஓய்வுபெற்ற பின்னரும் வேலைக்குச் செல்ல நள்ளிரவில் எழுவது.

**தகவல் தொடர்பில் சிக்கல்:** அடிக்கடி ஒரே விடயத்தைச் சொல்வது, சரியான வார்த்தைகளைக் கண்டுபிடிக்க முடியாமல் போவது, வாசிப்பு மற்றும் எழுதுவதில் சிரமம், மற்றும் மற்றவர்களுடன் பேசுவதில் ஆர்வம் குறைவது.

**மனநிலை மற்றும் நடத்தை மாற்றங்கள்:** பதட்டம், மனச்சோர்வு, அமைதியின்மை மற்றும் கோபம் போன்ற மனநிலை மாற்றங்கள் ஏற்படும்.

## நோயறிதல்

ஒருவருக்கு மறதிநோய் அறிகுறிகள் இருந்தால், உடனடியாக மருத்துவரை அணுகுவது அவசியம். ஏனெனில், சில சிகிச்சை அளிக்கக்கூடிய நோய்களும் மறதிநோய் போன்ற அறிகுறிகளை வெளிப்படுத்தும். உதாரணமாக:

* உடல் தொற்றுகள்
* தைராய்டு பிரச்சினைகள்
* ஊட்டச்சத்து குறைபாடுகள் (வைட்டமின் பி12 குறைபாடு)
* மன அழுத்தம் அல்லது மனச்சோர்வு.

மருத்துவர் முழுமையான உடல் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை மற்றும் மூளை ஸ்கேன் (brain scan) போன்ற பரிசோதனைகள் மூலம் சரியான காரணத்தைக் கண்டறிவார்.

## தடுப்பு வழிகள்

மறதிநோயைத் தடுக்க நேரடியான வழி இல்லை. இருப்பினும், சில வாழ்க்கை முறை மாற்றங்கள் மூலம் அதன் ஆபத்தைக் குறைக்கலாம் அல்லது தாமதப்படுத்தலாம்.

**ஆரோக்கியமான உணவு:** சமச்சீர் மற்றும் சத்தான உணவை உண்ணுங்கள்.

**உடற்பயிற்சி:** தொடர்ந்து உடற்பயிற்சி செய்வது அவசியம். மனதை சுறுசுறுப்பாக வைத்திருங்கள்: புதிர்கள் தீர்ப்பது, புதிய மொழி கற்பது, வாசிப்பது அல்லது தோட்டக்கலை போன்ற செயல்களில் ஈடுபடுங்கள்.

**சுகாதாரப் பழக்கங்கள்:** புகைபிடித்தல் மற்றும் மது அருந்துவதைத் தவிர்த்தல், ஆரோக்கியமான உடல் எடையைப் பராமரித்தல், மற்றும் உயர் இரத்த அழுத்தம் அல்லது நீரிழிவு போன்ற நோய்களைக் கட்டுக்குள் வைத்திருத்தல்.

## அன்பானவர்களுக்கு உதவுவது எப்படி?

உங்கள் அன்பானவர்களுக்கு மறதிநோய் அறிகுறிகள் இருந்தால், உடனடியாக மருத்துவரை அணுகுவது மிகவும் முக்கியம். அதை எப்படி அணுகுவது என்பதற்கான சில வழிகள்:

**படிப்படியாக எடுத்துரைத்தல்:** அறிகுறிகளை அவர்கள் புறக்கணிக்க நேரிடும். எனவே, மெதுவாகவும், மென்மையாகவும் அவர்களிடம் பேசுங்கள்.

**சரியான வாய்ப்பைப் பயன்படுத்தவும்:** அவர்கள் உடல்நலக் குறைபாட்டை உணரும்போது அல்லது ஏதேனும் ஒரு அறிகுறி பற்றி கவலைப்படும்போது, மருத்துவரை அணுகும்படி ஊக்கப்படுத்துங்கள்.

**அணுகுமுறையை மாற்றுங்கள்:** அவர்களைப் பயமுறுத்தாமல், மருத்துவரிடம் செல்வதன் முக்கியத்துவத்தை விளக்குங்கள். அவர்களுக்காக அதைச் செய்யும்படி கேட்டுக்கொள்ளலாம்.

மறதிநோய் என்பது வயதாவதின் தவிர்க்க முடியாத பகுதி அல்ல. ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சை பெறுவதன் மூலம், அதன் தாக்கத்தைக் குறைத்து, வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடியும்.

நாවෙළි NAAVELI நாவெளி
பிரதேச செயலகம் ~ நாவிதன்வெளி
ds@navithanveli.ds.gov.lk
திங்கட்கிழமை / மலர் - 20 / இதழ் - 53 / 25 ஆவணி 2025

# மத்தியஸ்தம் தொடர்பில் தெளிவூட்டும் கருத்தரங்கு



-திரு.இ.லெ. முகம்மட் அன்பாஸ்

மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் (Ministry of Justice- Mediation Boards Commission) ஏற்பாட்டில் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பொதுமக்களுக்கு மத்தியஸ்தம் தொடர்பில் தெளிவூட்டும் கருத்தரங்கானது பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் 2025 ஆகஸ்ட் 06ஆம் திகதியன்று பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.





நாவிதன்வெளி பிரதேச செயலக மத்தியஸ்த அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. இ. லெ. முகம்மட் அன்பாஸ், அம்பாறை மாவட்ட செயலக மத்தியஸ்த அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. எஸ். றிஸ்மினா ஆகியோர் இந்நிகழ்வில் வளவாளர்களாக கலந்து கொண்டதுடன் மத்தியஸ்தம் தொடர்பான விளக்கம் அதன் நடைமுறைகள் மற்றும் மத்தியஸ்த சபை மூலமாக கையாளப்படும் பிணக்குகள், மத்தியஸ்த சபையின் வளர்ச்சி என பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் பொதுமக்களுக்கான தெளிவூட்டல்களை வழங்கினர். மேலும் இந்நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. டெ. றொசாயிறோ, தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. ஏ. கே. ஹனா, நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. அ. சசிகலா ஆகியோரும் கலந்து கொண்டனர்.













# வெகுசன ஊடகம் தொடர்பான ஒருநாள் பயிற்சி

-ஏ.எல்.எம்.ஷினாஸ்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்ட செயலகத்தின் வழிகாட்டலில் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பாடசாலைகளில் உயர்தர பிரிவில் வெகுசன ஊடகம் தொடர்பான கற்கையை மேற்கொள்ளும் மாணவர்களுக்கான ஒருநாள் பயிற்சி செயலமர்வு 2025 ஆகஸ்ட் 13ஆம் திகதி நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது. பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல். எம்.ஷினாஸ் அவர்களின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திரு. பே. பிரணவரூபன் அவர்களும் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலாசார உத்தியோகத்தர் திருமதி. வி. நகுலநாயகி, இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி. பா. சறோஜினி, மத்தியஸ்த அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. இ. லெ. முகம்மட் அன்பாஸ் உள்ளிட்ட அலுவலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

இச்செயலமர்வின் வளவாளர்களாக இலங்கை ரூபவாஹினி கூட்டுத் தாபனத்தின் செய்தி வாசிப்பாளரும் அறிவிப்பாளருமான மசூர் அன்ஸஹான், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் மற்றும் பிறை எப்.எம் ஆகியவற்றின் அறிவிப்பாளர், எழுத்தாளர் மற்றும் நாடக கலைஞருமான அதிபர் ஜே. வஹாப்தீன், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தரும் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் அறிவிப்பாளருமான ஏ.எல்.எம். ஷினாஸ் ஆகியோர் கலந்து கொண்டதுடன் ஊடக தொழில்நுட்ப கருவிகள், ஊடகத்தின் பயன்பாடுகள், ஊடக தொழில்நுட்ப கருவிகளை மாணவர்களின் கற்றல் உபயமாக பயன்படுத்தும் வழிமுறைகள், தொலைக்காட்சி ஒலி, ஒளிபரப்பு ஊடகத்தின் செயல் திறன்கள், ஊடகமும் மொழியாற்றலும் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் மாணவர்களுக்கான தெளிவூட்டல்களை வழங்கினர்.

















# சனாதிபதி நிதியத்தின் மருத்துவ உதவிக் கொடுப்பனவு

-திருமதி. த. மயூரதா



சனாதிபதி நிதியத்தின் (President's Fund) சேவைகள் பிரதேச செயலக மட்டத்திற்கு பரவலாக்கப்பட்டு நிகழ்நிலை முறையில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களுக்கான கொடுப்பனவுகளை நேரடியாக பிரதேச செயலகங்கள் மூலமாக பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டத்தின் மூலமாக நாவிதன்வெளி பிரதேச செயலகப்பிரிவில் முதலாவதாக மத்தியமுகாம்-06 கிராம அலுவலர் பிரிவினை சேர்ந்த பயனாளிக்கான இருதய சத்திர சிகிச்சைக்கான 300,000 ரூபாய்க்கான மருத்துவ உதவிக் கொடுப்பனவு கிடைக்கப்பெற்றது. இதற்க்கான காசோலையை வழங்கி வைக்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் 2025 ஆகஸ்ட் 04ஆம் திகதியன்று பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், நாவிதன்வெளி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திரு. பே. பிரணவரூபன், கணக்காளர் திரு. க. றிஸ்வி யஹ்சர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. தி. கிருபைராஜா, சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திரு. செ. சிவம், நிருவாக கிராம உத்தியோகத்தர் திரு. மனோஜ் இந்ரஜித், சமூக சேவை உத்தியோகத்தர் திரு. கு. குணரெட்ணம், கிராம அலுவலர் A.A. வசீமா பானு, விடய உத்தியோகத்தர் திருமதி. த. மயூரதா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான ஆக்கத்திறன் போட்டிகள்

-என்.நீலேந்திரன்









இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான ஆக்கத்திறன் போட்டிகள் பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் வழிகாட்டலில் நாவிதன்வெளி கலாசார மத்திய நிலையம், வாணி மகாவித்தியாலயம் (மத்தியமுகாம்-01) மற்றும் அன்னமலை நாவிதன்வெளி மகாவித்தியாலயம் (நாவிதன்வெளி-01) ஆகியவற்றில் 2025 ஜூலை 26 மற்றும் 27ஆம் திகதிகளில் இடம்பெற்றன.

நாவிதன்வெளி பிரதேச செயலக இந்து சமய கலாசார உத்தியோகத்தர்களான திரு. க. நீலேந்திரன் மற்றும் திருமதி. சறோஜினி பாலசுந்தரம் ஆகியோரின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பேச்சு, கதாப்பிரசங்கம், சொல்லாடற் திறன், பண்ணிசை, பரத நாட்டியம், நாடகம், வில்லுப்பாட்டு, கட்டுரை, சித்திரம் வரைதல் ஆகிய போட்டிகள் இடம்பெற்றன. பாடசாலை ஆசிரியர்கள் நடுவர்களாக கலந்து கொண்டதுடன் மாணவர்கள் போட்டி நிகழ்வுகளில் ஆர்வத்துடன் பங்குபற்றினர்.

# தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பில் தெளிவூட்டல் வழங்கும் கருத்தரங்கு

-எம்.ஐ. முகம்மட் அஸாப்

2016 ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பில் நாவிதன்வெளி பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு தெளிவூட்டல் வழங்கும் கருத்தரங்கானது பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் வழிகாட்டலுக்கமைவாக மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தினால் 2025 ஆகஸ்ட் 14ஆம் திகதியன்று பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

தகவல் கோரும் பொதுமக்களும், தகவல் வழங்க தயாராக இருக்கின்ற பகிரங்க அதிகார சபைக்கும் இச்சட்டம் பற்றிய தெளிவின்மை நிலவுவதன் காரணமாக ஏற்படும் அசௌகரியங்களை குறைக்கும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வில் வளவாளராக சட்டத்தரணி திரு. P. முகுந்தன் (LLB, B.Com HNDA) அவர்கள் கலந்து கொண்டு தகவல் அறியும் சட்டம் மூலமாக தகவல்களை கோரும் முறை, கோரக் கூடிய தகவல்கள், வழங்கமுடியாத தகவல்கள் மற்றும் பகிரங்க அதிகாரசபையின் வகிபாகங்கள் தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கான தெளிவூட்டல்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் உத்தியோகத்தர்களுடன் நாவிதன்வெளி பிரதேச செயலக தகவல் அறியும் உரிமைச்சட்டம் தொடர்பில் கடமையாற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள், சமுர்த்தி பிரிவு உத்தியோகத்தர்கள், சமுர்த்தி வங்கிகளின் முகாமையாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.















# மாணவர்களுக்கான உற்பத்தித்திறன் மற்றும் புத்தாக்கம் தொடர்பான பயிற்சி

-எம். ஐ. அப்ஃகர்





கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் தேசிய உற்பத்தித்திறன் செயலகம் மூலமாக நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான உற்பத்தித்திறன் மற்றும் புத்தாக்கம் தொடர்பான பயிற்சி நெறியானது பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் 2025 வைகாசி மாதம் 26ஆம் திகதியன்று பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நாவிதன்வெளி பிரதேச செயலக உற்பத்தித்திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம். ஐ. அப்ஃகர் அஹமட், திருமதி. என். நளினிதேவி ஆகியோரின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இப்பயிற்சிநெறியானது உற்பத்தித்திறன், தர முகாமைத்துவம், புத்தாக்கம், 5S எண்ணக்கரு, கைசன் எண்ணக்கரு, தர வட்டம், பசுமை உற்பத்தித்திறன், அறிவு முகாமைத்துவம், மென்திறன்கள், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல், ஸ்மார்ட் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு ஆகிய அலகுகளை உள்ளடக்கியதாக 145 மணித்தியாலங்களைக் கொண்ட பாடநெறியாக இடம்பெற்றது. குறித்த துறைசார் வல்லுநர்களை விரிவுரையாளர்களாக கொண்டு நடாத்தப்பட்டதுடன் பாடநெறியின் முடிவில் மாணவர்களால் ஒப்படைத் திட்டங்களும் சமர்ப்பிக்கப்பட்டன. மேலும், இதன் இறுதிப் பரீட்சையானது 2025 ஆவணி 21ஆம் திகதி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.









# நாவிதன்வெளி பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

நாவிதன்வெளி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் 2025ஆம் ஆண்டிற்கான இரண்டாம் காலாண்டிற்கான கூட்டமானது பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும் அரசியலமைப்பு பேரவையின் தலைவருமாகிய பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ திரு. அ. ஆதம்பாவா அவர்களின் தலைமையில் 2025 ஆவணி 25ஆம் திகதியன்று பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான கௌரவ திரு. மீராசாய்வு உதுமாலெவ்வை, கௌரவ திரு. எம்.எஸ். அப்துல் வாஸித், நாவிதன்வெளிப் பிரதேச சபையின் தவிசாளர் கௌரவ திரு. இ. ரூபசாந்தன், பிரதேச சபையின் கௌரவ உறுப்பினர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோருடன் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன், கணக்காளர் திரு. க. றிஸ்வி யஹ்சர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. தி. கிருபைராஜா, நிருவாக உத்தியோகத்தர் திரு. ஓ. கே. கீர்த்தி குசுமிந்த, நிருவாக கிராம உத்தியோகத்தர் திரு. மனோஜ் இந்ரஜித், சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திரு. செ. சிவம் உட்பட பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களும், நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பல்வேறு துறைசார் நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள், அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் மற்றும் நாவிதன்வெளி பிரதேச செயலக வெளிக்கள, கிராம மட்ட உத்தியோத்தர்களும் கலந்து கொண்டனர்.

நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவில் சேதமுற்று காணப்படும் வீதிகளைப் புனரமைப்பு செய்வது தொடர்பாகவும் பிரதேசத்தில் நிலவும் காணிப் பிணக்குகள் தொடர்பாகவும் அரசின் இவ்வாண்டுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன் காணி உறுதிப் பத்திரம் அற்ற பயனாளிகளுக்கு காணி உறுதிப் பத்திரமும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தலைவரினால் வழங்கி வைக்கப்பட்டது. மேலும் அன்றைய தினம், கிராமிய வீதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப் பெற்ற 07 வீதிகளுக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தலைவரினால் அடிக்கல் நடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

-திரு. கி. அமிர்தலிங்கம்


















# குடும்ப நலனிலும் குழுக்களிலும் பால்நிலையின் செல்வாக்கும் அதனை பால்நிலை சமத்துவமாக மாற்றும் உபாயங்களும்

பால்நிலை என்பதனை விளங்கிக்கொள்ள முதல் நாம் பாலியல் என்பதனை விளங்கிக்கொள்வது அவசியமாகும். பால்நிலை என்பது, பாலியல் எனும் சொல்லிலிருந்து வேறுபட்ட ஒன்றாகும். அதாவது "பாலியல்"(SEX) என்பது ஒருவருடைய பிறப்புறுப்பால் தீர்மானிக்கப்படுகின்ற ஓர் உயிரியல் அம்சமாகும். இது ஒருவர் பிறக்கின்றபோது அவருடைய பிறப்புறுப்பைக்கொண்டு ஆணா அல்லது பெண்ணா என தீர்மானிக்கின்ற அம்சமாகும். இது இயற்கையாக இறைவனால் தோற்றுவிக்கப்படுகின்ற ஒன்றாகும்.

"பால்நிலை" (Gender) என்பது, ஒருவருடைய பாலின அடையாளத்தையும், சமூகத்தில் அவர்கள் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள் என்பதையும் குறிக்கும் ஒரு சொல். இது ஒருவருடைய பிறப்புறுப்பு அல்லது உயிரியல் ரீதியான கூறுகளைக்கொண்டு ஆணாகவும் பெண்ணாகவும் அடையாளப்படுத்தப்படுகின்றபோது அவருக்கு சமூகத்தால் உருவாக்கப்பட்ட பாத்திரங்கள், நடத்தை விதிகள் மற்றும் எதிர்பார்ப்புக்களே பால்நிலை எனப்படுகின்றது. அதாவது, பால்நிலை என்பது ஒரு நபர் தன்னை ஒரு ஆணாகவோ, பெண்ணாகவோ அல்லது வேறு பாலின அடையாளமாகவோ உணர்வதும், சமூகத்தில் அந்த அடையாளம் வெளிப்படும் வகையில் அவர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்று சமூகத்தால் வழங்கப்படுவதும் ஆகும். சுருக்கமாகக் கூறுவதானால், சமூகத்தில் ஓர் ஆண் எவ்வாறு இருக்க வேண்டும், ஒரு பெண் எவ்வாறு இருக்க வேண்டும் என்று சமூகத்தினால் சொல்லிக்கொடுக்கப்படுவது ஆகும். இது மாற்றமடையக்கூடிய ஒன்றாகும்.

இந்த "பால்நிலை" என்ற வரையறையானது பிறப்பு முதல் இறப்பு வரை ஒரு மனிதனின் வாழ்க்கையில் செல்வாக்குச் செலுத்துகின்றது. மனிதனின் முதலாவது சமூகமயப்படுத்தல் நிறுவனமான குடும்ப அலகிலிருந்து ஏனைய சமூக நிறுவனங்களான கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், அரசியல், கலாசாரம், மதம் விளையாட்டுகள் என அனைத்து குழு மட்டங்களிலும் இந்த பால்நிலையின் செல்வாக்கினை காணக்கூடியதாக உள்ளது. குறிப்பாக இந்த செல்வாக்கானது அல்லது இந்நிறுவனங்களூடாகக் கிடைக்கின்ற வாய்ப்புகளானவை ஆண் மற்றும் பெண் என்றடிப்படையில் வேறுபடுகின்றன.

பெரும்பாலான சமுதாயங்களில் வளங்களை அணுகவும், கட்டுப்பாட்டுடன் முடிவெடுப்பதில் பங்கேற்கவும் முடிவெடுக்கும் திறன், உயர் அதிகாரங்களை வகிப்பதிலும் ஆண்களைக் காட்டிலும் பெண்கள் குறைவான அணுகலைக் கொண்டிருக்கின்றார்கள். காரணம் சமூகத்தினால் உருவாக்கப்பட்ட கட்டமைப்பே காரணமாகும். இந்த பால்நிலை வேறுபாடானது குடும்பத்திலும் ஏனைய குழுக்களிலும் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதனை பின்வருமாறு நோக்கலாம்.

## 01. குடும்பத்தில் பால்நிலையின் செல்வாக்கு

ஒரு மனிதனை சமூகமயப்படுத்தும் முதன்மை நிறுவனங்களுள் முதன்மையானது குடும்பம் ஆகும். இதிலிருந்தே பால்நிலையின் செல்வாக்கு ஆரம்பமாகின்றது.

* குழந்தை பிறக்க முன்பே ஆண் பிள்ளைக்கும் பெண் பிள்ளைக்கும் வேறுபட்ட நிறங்களைத் தேர்வு செய்தல்,

* வேறுபட்ட இனிப்புப் பண்டங்களை பகிர்ந்தளித்தல் (ஆண் பிள்ளை பிறந்தால் கற்கண்டு, டொபி வழங்குதல், பெண் பிள்ளை பிறந்தால் ஈச்சம்பழம் வழங்குதல்),

* வேறுபட்ட விளையாட்டு உபகரணங்களை வாங்கிக் கொடுத்தல். (ஆண் பிள்ளைக்கு பந்து, துப்பாக்கி, வண்டி பெண் பிள்ளைக்கு பொம்மை, சமையல் உபகரணம் வாங்கி கொடுத்தல்),

* ஆண் பிள்ளைக்கு காற்சட்டை, சேட் வாங்கி கொடுத்தல், பெண் பிள்ளைக்கு தாவணி, பாவாடை வாங்கிக் கொடுத்து அழகு பார்த்தல்.

* ஆண் பிள்ளை மரம் ஏறுதல், சுவர் ஏறுதல், உயரமான பகுதிகளில் ஏறி விளையாடுவதற்கு அனுமதிக்கின்ற குடும்பம் பெண் பிள்ளையினை அடக்கமாக, பண்பாக நடந்துகொள்ள வேண்டும் என சொல்லிக்கொடுத்தல்.

* ஆண் பிள்ளை அழக்கூடாது. பெண் பிள்ளை சத்தமாக சிரிக்கக்கூடாது.

* பெண்களை குழந்தைகளை பராமரித்தல், குடும்பத்தைக் கவனித்தல், சமைத்தல், துணி துவைத்தல் மற்றும் பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக்கொடுத்தல் போன்ற குடும்ப வேலைகளுக்குப் பொறுப்பானவளாகவும் ஆண்களை குடும்பத்தில் தலைமைத்துவம் வகிப்பவர், பொருளாதாரத்தை கட்டியெழுப்புபவர், உழைப்பவர், தீர்மானம் எடுப்பவர், வெளி வேலைகளைக் கவனிப்பவர் போன்ற பணி வேறுபாடுகளை உருவாக்குதல்.



* பெண்கள் உழைத்து குடும்பத்தை கவனிக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தமில்லை. ஆனால் ஆண் உழைத்து குடும்பத்தைக் கவனிக்க வேண்டும்.

* பெண்கள் நேரத்திற்கு வீடு வந்து சேரவேண்டும். ஆனால் ஆண்கள் அவ்வாறில்லை.

* ஆண் - பெண் உறுப்பினர்களிடையே எதிர்பார்ப்பு வேறுபாடு: பெண்கள் பணிவு, மென்மையாக, சாதுவாக நடந்து கொள்ள வேண்டும் எனவும் ஆண்கள் துணிச்சல், வீரம், வெற்றியோடு இருக்க வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

* உரிமைகள் மற்றும் சுதந்திரம்: ஆண்களுக்கு அதிக சுதந்திரம் (நட்பு, வேலை, நேரம், சொத்துப் போக்கு). பெண்களுக்கு கட்டுப்பாடு, "மாறாத மரியாதை" என்ற பிணைப்பு.

* மன அழுத்தம் மற்றும் அடக்கம். அதாவது ஆண்களைக் காட்டிலும் பெண்கள் அதிகம் கட்டுப்படுத்தப்படுவதனால் கட்டாய உரிமைகள் மற்றும் சுதந்திரம் என்பன பறிக்கப்படுகின்றன. இதனால் ஆண்களை விட பெண்களே அதிகம் மன உளைச்சல்களுக்கு ஆளாகின்றனர்.

இவ்வாறாக குடும்பத்தில் பால்நிலையின் செல்வாக்கு அணு அணுவாக செல்வாக்குச் செலுத்துகின்றன. எனவே குடும்ப மட்டத்தில் பரந்து காணப்படுகின்ற இவ்வாறான



பால்நிலை சார்ந்த எண்ணக்கருக்களில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமானால் பால்நிலை சமத்துவ சிந்தனையினைக் கட்டியெழுப்ப வேண்டும். இதன்மூலம் எதிர்காலத்தில் வன்முறையற்ற சமுதாயத்தை உருவாக்க வழி வகுக்கும். அந்த வகையில் பால்நிலை சமத்துவம் அதன் முக்கிய அம்சங்கள் தொடர்பாக பின்வருமாறு நோக்கலாம்.

பால்நிலை சமத்துவம் என்பது ஆண்கள், பெண்கள் மற்றும் பிற பாலினத்தவர்களுக்கும் சம உரிமை, வாய்ப்பு, மதிப்பு, பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்பதைக் குறிக்கும். பால்நிலை சமத்துவம் என்பது ஒரு விருப்பம் அல்ல - அது மனித உரிமையின் அடிப்படை. இது சமுதாய நியாயத்தின் கோட்பாடாக காணப்படுகிறது.

பல ஆண்டுகளாக பெண்கள், சமூகத்தில் இரண்டாம் நிலையாகக் கருதப்பட்டனர். அவர்களுக்கான கல்வி, வேலை, சொத்து உரிமை, அரசியல் பங்கேற்பு போன்றவற்றில் தடைகள் இருந்தன. தற்போது பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் இன்னும் பாலினத்தால் ஏற்படும் வேறுபாடுகள் பல துறைகளிலும் காணப்படுகின்றன. இன்று மருத்துவர், பொறியிலாளர், அரசியல்வாதி, மேலாளர் என பல துறைகளிலும் முன்னேறுகின்றனர். இருந்தாலும் அவர்கள் இன்னும் சம உரிமை, சம ஊதியம், பாதுகாப்பு போன்றவற்றிற்காக போராட வேண்டிய நிலை இருக்கிறது.

ஆகையினால்தான், பால்நிலை சமத்துவமின்மை தோற்றுவிக்கப்படுகின்ற முதன்மை நிறுவனமான குடும்பத்திலிருந்தே நாம் பால்நிலை சமத்துவ சிந்தனைகளைத் தோற்றுவிக்க வேண்டும். அது தொடர்பான விழிப்புணர்வு மற்றும் பாலியல் - பால்நிலை சார்ந்த கற்கைகளை பாடசாலைகளில் அறிமுகப்படுத்த வேண்டும். இது தொடர்பான மாற்றங்களைக் கொண்டுவர கீழ்வரும் உபாயங்களை குடும்பத்தில் கைக்கொள்ளலாம்.

*வேலைப்பகிர்வினை நடைமுறைப்படுத்தல்:

அதாவது, குடும்பத்திலுள்ள அங்கத்தவர்கள் அனைவரும் அவரவர் வேலைகளை அவரவர் செய்வதற்கான நடைமுறையினை அமுல்படுத்தல். இதன்மூலம் குடும்பத்தில் பெண்கள்தான் செய்ய வேண்டும் ஆண்கள் செய்யக்கூடாது என்ற எண்ணப்பாங்கைக் களைந்து பால்நிலை சமத்துவச் சிந்தனையை உருவாக்க முடியும்.

*ஒத்துழைப்புகளை வழங்குவதற்கான திட்டத்தை நடைமுறைப்படுத்தல்:

அதாவது குடும்பத்திலுள்ளவர்கள் அவரவர் வேலைகளை செய்து முடித்ததும் ஏனையவர்களுக்கு தங்களால் முடியுமான உதவிகளைச் செய்து ஒத்துழைப்புக்களை வழங்குதல். உதாரணமாக, கணவன் தனது வேலையினை முடித்ததும் மனைவியின் வேலைகளில் தன்னால் முடியுமான ஒத்துழைப்பை வழங்குதல். அவ்வாறே பிள்ளைகள் தங்களது வேலைகளை முடித்ததும் பெற்றோர், சகோதரர்களுக்கு உதவிகளைச் செய்து கொடுத்தல்.

* குடும்பத்தின் மத்தியில் பால்நிலை சமத்துவம் பற்றிய தெளிவான சிந்தனைகளை வழங்குதல். அது குறித்து அவர்களைக் பழக்கப்படுத்திவிடுதல்.

* பெண்கள் செய்யும் வேலைகளைக் ஆண்களால் செய்ய முடியுமானால் அவ்வேலைகளை அவர்களைச் செய்ய சந்தர்ப்பமளித்தல்.

அதாவது, துணி துவைத்தல், சமையலில் ஒத்துழைப்பு வழங்குதல், பிள்ளைகளின் விடயங்களில் அக்கறைகாட்டுதல், வீட்டு வேலைகளில் பங்கெடுத்தல் போன்ற வேலைகள் பெண்கள்தான் செய்ய வேண்டும் என்ற நிலையை மாற்றுதல்.

* பெண்கள் வெளியில் சென்று உழைக்கக் கூடாது, பொருளாதாரத்தில் பங்கெடுக்கத் தேவையில்லை என்ற சிந்தனைகளைக் களைந்து பெண்களும் தொழில் செய்ய முடியும், அவர்களும் வருமானமீட்டுவதில் பங்களிப்புச்செய்ய முடியும் என்ற நிலையினையும் சிந்தனையினையும் வீட்டில் நிலைநிறுத்துதல். வீட்டுத் தோட்டம் செய்தல், சிறுகைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுதல், அதற்காக வீட்டிலுள்ளோர்கள் ஒத்துழைப்பு வழங்குதல் போன்றவற்றை வழங்குவதனூடாக பால்நிலை சமத்துவத்தினை வீட்டில் உருவாக்க முடியும்,

* பழமைச் சிந்தனைகளைக் களைதல்: அதாவது "அடுப்பூதும் பெண்ணுக்கு படிப்பெதற்கு", "பெட்டைக்கோழி கூவி பொழுது விடியாது" போன்ற இன்னும் பல பழமைவாத சிந்தனைகளை வீட்டிலிருந்தே விலக்கிவிடுதல்.

இவ்வாறான உபாயங்களைக் கையாள்வதன் மூலம் குடும்பத்தில் பால்நிலையின் செல்வாக்கினை பால்நிலை சமத்துவத்திற்கான நேர்மறை அம்சமாக மாற்ற முடியும்.

## குழுக்களில் பால்நிலையின் செல்வாக்கு

சமூகக் குழுக்களின் (Social Groups) முக்கிய பண்புகள் பற்றிப் பேசும்போது, மனிதர்கள் ஒன்றுகூடி சமூக உறவுகளை உருவாக்கும் விதத்தில் பல்வேறு பொதுப் பண்புகளின் அடிப்படையில் ஒன்று சேர்ந்து முறையாக இயங்கும் அமைப்பாகும்.

பால்நிலையின் செல்வாக்கு குழுக்களுக்கிடையே செல்வாக்கு செலுத்தும் விதம் என்பது, ஒரு சமூகத்தில் பல்வேறு சமூக, பொருளாதார, பண்பாட்டு குழுக்களுக்கிடையில் ஆண்கள் மற்றும் பெண்கள் சம உரிமை பெறும் முறை, ஆண் மற்றும் பெண் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் இடம், மதிப்பு, அதிகாரம் மற்றும் பங்களிப்பு சார்ந்த வேறுபாடுகளை குறிக்கிறது. இது கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், அரசியல், கலாசாரம், மதம், விளையாட்டுகள், வேலைத்தளம் மற்றும் சமூக அமைப்புகள் போன்ற அனைத்து குழுக்களிலும் தாக்கம் செலுத்துகிறது. அவற்றை உற்றுநோக்குவோமானால்,





* கல்வி நிலையினை எடுத்துக் கொண்டால், ஆசிரியர் சேவை, தாதியர் சேவை, வைத்தியத் துறைகளில் பெண்கள் தெரிவு செய்ய வேண்டும் என்றும் பொறியியலாளர் சேவை, இலங்கை நிருவாக சேவை, நீதித்துறை, பாதுகாப்புச் சேவை, முப்படைப்பிரிவு போன்ற தெரிவு ஆண்களுக்குப் பொருத்தமானது என்று கல்வி நிலையங்களில் பால்நிலை செல்வாக்கு புகுத்தப்படுகின்றன.

* சுகாதாரத்துறையினை எடுத்து நோக்கினால் தாதியர் சேவை, குடும்ப நல அதிகாரிகள், சுத்தப்படுத்தல் பகுதிகளில் பெண்களும் நிருவாகப் பிரிவு, கண்காணிப்புப் பகுதி, மருந்து கொடுக்கும் பகுதி மற்றும் அம்பியூலன்ஸ் வாகன ஓட்டுநர்களாக ஆண்கள் இருக்க வேண்டும் என்ற மனநிலை சமூகத்தின் மத்தியில் வேரூன்றிக் காணப்படுகின்றது.

* பொருளாதார நிலையினை எடுத்துக் கொண்டால் கடும் உழைப்பாளிகளாக ஆண்கள் தான் இருப்பார்கள். அவர்கள் தான் பொருளீட்டல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு நிதிகளைக் கையாள வேண்டும், மேலும் சலுகைகள் மற்றும் மேலதிக நேர வேலை, அவற்றுக்கான சம்பளம்

என்பவற்றிற்கெல்லாம் ஆண்களே முன்னுரிமைப் படுத்தப்பட்டனர். பெண்களுக்கு மேலதிக நேர வேலைகள் வழங்கப்படுவதில்லை, சம்பளங்களில் பாகுபாடு, பெண்களை திறமையற்றவர்களாகக் கருதி அவர்களுக்கு வளங்கள் மற்றும் வாய்ப்புகளை வழங்க மறுத்தல் போன்ற நிலைகளைக் காணலாம்.

* அரசியல் துறைகளை எடுத்துக்கொண்டால், தற்போது பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டாலும் அதன் அவசியம் உணரப்படுவதில்லை. சட்டங்கள் மேற்கொள்ளும் இடங்களிலும், தீர்மானங்கள் மேற்கொள்வதிலும், அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் பெண்கள் உள்வாங்கப்படுவதில்லை. பெண்களின் அரசியல் பங்கேற்பு என்பது சமூகத்தின் மத்தியில் ஓர் இழிவு நிலையாகப் பார்க்கப்படுகின்றது. அவ்வாறான பெண்களை சமூகமே புறந்தள்ளுகின்ற, வித்தியாசமாகப் பார்க்கின்ற நிலை காணப்படுகின்றது.

* கலாசார ரீதியாக நோக்கினால், ஆண்கள் தவறிழைத்தால் அதனை சம்பவமாகப் பார்க்கின்ற சமூகம், பெண்கள் தவறிழைத்தால் அதனை சரித்திரமாகப் பார்க்கின்றது. வாழையடி வாழையாக இச்சம்பவம் கடத்தப்படும். அவ்வாறே, மனைவியை இழந்தவன் மணாளன் ஆகின்றான், கணவனை இழந்தவள் விதவையாகின்றாள். வருமானத்திற்காக அவள் வெளியே செல்வதைக்கூட தவறாகவே இச்சமூகம் பார்க்கின்றது.

* மத ரீதியாகப் பார்க்கின்றபோது மத ரீதியான நடவடிக்கைகள் மற்றும் நிர்வாகங்களில் ஆண்களுக்கு முன்னுரிமை அளிப்பதும் பெண்கள் புறந்தள்ளப் படுவதனையும் எம்மால் அவதானிக்க முடிகின்றது.

* வேலைத்தளங்களில் பாரியளவில் பால்நிலை செல்வாக்குச் செலுத்துவதனை அவதானிக்க முடிகின்றது. ஆண், பெண் இருபாலாரும் சம அளவிலான தகுதி மற்றும் திறமைகளைக் கொண்டிருந்தாலும் அவர்களுக்கிடையே பால்நிலை அடிப்படையிலான பாகுபாடு காட்டப்படுகின்றது. பெண்கள் குடும்பப் பொறுப்புக் கூடியவர்கள், அவர்கள் மென்மையான மனநிலையினையுடையவர்கள், பிள்ளைப் பராமரிப்பு, கடமைகள் நிறைந்தவர்கள் போன்ற பல்வேறு காரணங்களை சுட்டிக்காட்டி அவர்களுக்கான வாய்ப்புகளை நிராகரிக்கின்றனர். அதிகாரம், நிருவாகம், தலைமைத்துவம் என்பதனை ஆணுக்கே உரித்தான அடையாளங்களாகக் கருதி அவர்களுக்கே வாய்ப்புகளும் வளங்களும் வழங்கப்படுகின்றன.

* முடிவெடுப்பதிலும் தீர்மானங்கள் எடுப்பதிலும் பெண்களுக்கான பங்களிப்புகள் வழங்கப்படுவதில்லை. பெரும்பாலும் வேலைத்தளங்களில் ஆண்கள் குழுவினரால் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு பின்னர் அது பெண்களுக்கு அறிவித்தலாக மட்டுமே வழங்கப்படுகின்றன.

* பெண்களால் ஒரு வேலையினை திறம்பட செய்ய முடியாது என்ற கண்ணோட்டத்தில் பெண்கள் செய்யும் எந்த வேலையினையும் தரக்குறைவாக அல்லது ஏளனமாக எடுத்துக்கொள்ளும் மனநிலை. அதே வேலையினை ஓர் ஆண் செய்கின்றபோது அது மெச்சப்படுகின்ற நிலையும் காணப்படுகின்றது.

* விளையாட்டுத்துறையினை எடுத்துக்கொண்டால், கடினமான விளையாட்டுகள் ஆண்களுக்குரித்தானவை என்றும் இலகுவான விளையாட்டுகள் பெண்களுக்கு உரித்தானவை என்றும் சமூகத்தினால் முத்திரை பதிக்கப்படுதல்.





இவ்வாறாக அனைத்துக் குழு நிலைகளிலும் ஆரம்பம் தொட்டு இற்றைவரை பால்நிலை செல்வாக்குச் செலுத்துவதனை அவதானிக்க முடிகின்றது. பால்நிலை பாகுபாடு, பால்நிலை சமத்துவம் போன்ற எண்ணக்கருக்களை ஏற்றுக்கொள்ள முடியாத சமூகம் இன்று வரை காணப்படுகின்றது. எது எவ்வாறிருப்பினும் பால்நிலையின் செல்வாக்கினைக் குறைத்து பால்நிலை சமத்துவ சிந்தனையினை குடும்ப மட்டத்தில் கொண்டு வருவது போன்று சமூகக் குழு நிலைகளிலும் மாற்றத்தினைக் கொண்டு வர வேண்டிய தேவைப்பாடும் அவசியமும் உணரப்படுகின்றது.

அந்தவகையில் பின்வரும் பொறிமுறைகளைக் கொண்டு பால்நிலை சமத்துவ சிந்தனைகளினை, மாற்றத்தினை சமூகக்குழுக்களில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

* பால், பால்நிலை வேறுபாடு பற்றியும், பால்நிலை பாகுபாடு, பால்நிலை சமத்துவம் பற்றியுமான அறிவை வழங்குவதற்கான கல்வித்திட்டங்களைக் கொண்டுவருதல். இரண்டாம் நிலைக் கல்வியின் ஆரம்பத்திலேயே இக்கற்கைகள் மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

* திருமணத்திற்கு முந்திய வயதுக்குழுவினருக்கும் திருமணத்திற்குப் பிந்திய தம்பதிகளுக்குமிடையே இவ்வாறான அறிவு மற்றும் பயிற்சிகளை வழங்க வேண்டும்.

* ஆண்கள் மற்றும் பெண்கள் அனைவருக்கும் பால்நிலைப் பாகுபாடு, பால்நிலை சமத்துவம் அவற்றின் முக்கியத்துவம் குறித்தான கருத்தரங்குகள் மற்றும் விழிப்புணர்வுகள் வழங்கப்பட வேண்டும்.

* அபிவிருத்தி நடவடிக்கைகளின்போது உள்ளார்ந்த அடிப்படையிலான பங்களிப்புகளுக்கும் கருத்துகளுக்கும் இடமளித்தல்.

* ஆண்கள், பெண்கள் மற்றும் மூன்றாம் பாலினத்தவர்கள் என்ற பாகுபாடின்றி சம வாய்ப்புகளையும் வளப்பங்கீட்டையும் மேற்கொள்ளல்.

இவ்வாறான பொறிமுறைகள் சமூக மட்டத்திலுள்ள அனைத்துக் குழுக்களிலும் நடைமுறைப்படுத்துவதன்மூலம் பால்நிலை சமத்துவ சிந்தனையினையும் மாற்றத்தினையும் கொண்டுவர முடியும்.

பால்நிலை என்பது சமூகத்தினால் உருவாக்கப்பட்டு பரம்பரை பரம்பரையாகக் கடத்தப்படுகின்ற ஒரு சமூக கட்டமைப்பாகவே காணப்படுகின்றது. ஆகையினால்தான் அது குடும்பம் மற்றும் குழுக்கள் ஆகிய இடங்களில் ஆழமான செல்வாக்கை செலுத்துவதனை மேற்கண்டவாறு ஒரு சில உதாரணங்களாக அவதானிக்க முடிகின்றது. இருந்தபோதிலும் பால்நிலை என்பது மாற்றமடையக் கூடியது. விழிப்புணர்வு, தெளிவூட்டல் போன்ற நடவடிக்கைகள் மூலம் அவற்றை நேர்மறை மாற்றமாக கொண்டுவர முடியும்.

எனவே பால்நிலை சமத்துவத்தை ஏற்படுத்த மேலே கூறப்பட்ட அனைத்து விடயங்களும் பொறிமுறைகளும் நடைமுறைப்படுத்தப்பட்டால் குடும்பம் மற்றும் குழுக்களில் பாகுபாடு இல்லாத சமத்துவமான மனிதநேயம்கொண்ட ஒற்றுமைமிக்க சமுதாயம் உருவாக முடியும்.

Sulaiman Labbe Fathima Sifaya
Women Development Officer
Karathivu.

# மெல்லக் கற்கும் மாணவர்களின் இயல்புகளும் அவர்களைக் கையாளும் நுட்பங்களும்



அ. சசிகலா
அபிவிருத்தி உத்தியோகத்தர்
தேசிய ஒருமைப்பாட்டு பிரிவு

எழுதறிவித்தவன் இறைவன் ஆவான். ஒவ்வொரு குழந்தைகளையும் எழுத்தறிவுள்ள கல்வி அறிவுள்ள குழந்தைகளாக இந்த உலகத்திற்கு பிரசவிக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு ஆசிரியர்களுக்கும் உள்ளது.

மெல்லக் கற்கும் மாணவரை சங்கீத பந்தாக ஒரு வகுப்பில் இருந்து இன்னொரு வகுப்பிற்கு தள்ளி விட நினைப்பது நாம் எங்களுடைய சொந்த பிள்ளைகளுக்குச் சேர்க்கும் பாவமாகும்.

## மெல்லக் கற்கும் மாணவரின் பொதுவான பண்புகள்

* நுண்ணறிவில் குறைபாடு உடையவராக இருத்தல்.

* சூழலுக்கு பொருத்தமான துலங்கலைக் காட்ட முடியாதவனாக இருப்பார்.

* மொழி வளத்தில் அதிக குறைபாடு உடையவராக இருப்பார்.

* உச்சரிப்புக்களில் சில வேளை குறைபாடு ஏற்படலாம்.

* நெறி பிறழ்வான செயற்பாடுகளில் சார்புள்ளவராக இருப்பார்.

* பாடசாலைக்கு நேரம் தாழ்த்தி வரும் வழக்கமுடையவராக இருப்பார்.

* அடிக்கடி விடுமுறையில் வீட்டில் நிற்கக் கூடியவராக இருப்பார்

* பிறப்பிலேயே நரம்புத் தொகுதியில் குறைபாடு உடையவராக இருப்பார்.

## மெல்லக் கற்கும் இயல்புடைய குழந்தைகளைக் கண்டறிய உதவும் வழிகள்

* வகுப்பில் உள்ள இத்தகைய குழந்தைகளை இளம் வயதிலேயே கண்டு பிடித்தால் தான் அவர்களது நிலையைச் சரிப்படுத்த ஆசிரியர் மேற்கொள்ளும் முயற்சிகளால் பயன் கிட்டும்

* இத்தகைய மாணவர்களைப் பிரித்தெடுத்து இவர்களின் நுண்ணறிவு ஈவைத் தனியாள் நுண்ணறிவு சோதனை மூலம் அறிய வேண்டும்.

* இவர்களைப் பற்றிய மருத்துவ சோதனை அறிக்கைகள், ஒழுங்கு, நடத்தைகள், குடும்பம், அவர் வளரும் சூழ்நிலை பற்றியும் விவரமான அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும்.

* இவ்வறிக்கையை ஆராய்ந்து அறியாமல் அவசரப்பட்டு ஒரு மாணவர் பிற்பட்டவர் என்று ஆசிரியர் முடிவுக்கு வருவது அம்மாணவரின் பிற்கால வாழ்வையே பாழாக்கும் தீய செயலாகும்.

* சில உளவியல் அறிஞர்கள் கண், காது ஓசையுடன் தொடர்புடைய அங்கங்கள் மத்திய நரம்புத் தொகுதி என்பன பரீட்சிக்கப்படுவதுடன் உளவியல் சோதனைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்கின்றார்கள்.

* வீட்டுச் சூழல் கவனத்தில் கொள்ளப்படல். அவர்களது குடும்ப வரலாற்றில் கடுமையான நோய்கள், உள நோய்கள் சமூக விரோத செயற்பாடுகள் இடம் பெற்றுள்ளமை தொடர்பாக அறிதல்.

* கேள்விக் குறைபாடு.

* செயல் திறன் குறைவு.

* பூரண வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும்.

## உள ரீதியான பண்புகள்

* குறைவான நுண்ணறிவு

* கருத்தியல் சிந்தனையின்மை

* நினைவாற்றல், ஆக்கத்திறன் நுணுக்க சிந்தனை குறைவு

* தாய் தந்தையர் உயிர் வாழ்கின்றமை இவர்களிடையே ஏற்படும் சண்டை சச்சரவுகள் என்பது தொடர்பாகவும் ஆராய்தல் வேண்டும்.

## உடல் ரீதியான பண்புகள்

* புலன் உணர்வில் பிற்பட்ட நிலை செயற்திறனால் பிற்பட்ட நிலை.

* பொது அறிவும் முடிவெடுக்கும் திறனும் இன்மை.

## கல்வியியல் பண்புகள்

* மொழித் திறன் குறைபாடு.

* மொழி வெளிப்பாட்டில பின் தங்கியிருத்தல்.

## சமூகம் சார் பண்புகள்

* வகுப்பினரால் தவிர்க்கப்படுதலும் ஒதுக்கப்படுதலும்.

* விரும்பத்தகாத சமூகப் பண்புகளைக் கொண்டிருத்தல்.

## கல்வியில் பிற்பட்ட மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான கல்வி முறைகள்

* சாதாரணமாக பிற்பட்ட மாணவர்கள் இறுதியில் மேல் வகுப்புக்கு அனுப்பப்படாமல் அவ்வகுப்பிலேயே நிறுத்தி வைக்கப்படுகின்றனர். இது ஒரு நல்ல முறை என்று கூற முடியாது.

* இப்படி நிறுத்தி வைக்கப்படும் மாணவர்கள் தம் தன்மானத்தை இழந்து தாழ்வு மனப்போக்குடையவர்களாக மாறக்கூடும்.

* இது படிப்பில் அவர்களை மென்மேலும் பின்னடையச் செய்யும். மெல்லக் கற்பவர்களுக்கு என்று தனிப்பட்ட வகுப்புகளை நடாத்துவது தான் சிறந்த முறையாகும்.

* தனியான மெல்ல கற்போர் பாடசாலைகளை விட, சாதாரண பாடசாலைகளிலேயே இவர்களுக்கு தனிப்பட்ட வகுப்புகள் நடாத்துவது சிறந்தது.

* சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர் மூலம் தனிப்பட்ட கவனம் மற்றும் சிறப்புக் கூடுதல்கள் வழங்குதல்.

* இணைந்து கற்றல் மூலம் மற்ற மாணவர்களின் உதவி பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்

* செவிமொழி, வீடியோ விளையாட்டுக்கள் போன்ற பல்வேறு கற்றல் முறைகளைப் பயன்படுத்தல்

* கற்றலுக்கான அமைதியான மற்றும் சோம்பல் இல்லாத சூழலை உருவாக்குதல்

* இதன்மூலம் மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு அவர்களின் திறன்களை மேம்படுத்தவும் கல்வியில் முன்னேற்றம் காணவும் உதவ முடியும்.

மெல்ல கற்கும் மாணவர்கள் என்றால் என்ன அவர்களின் இயல்புகள், பண்புகள் மாணவர்களுக்காக கையாளப்படுகின்ற கல்வி முறைகள் போன்றவை இத்தலைப்பில் முக்கிய விடயங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

இக்கட்டுரையினை வாசிப்பதன் மூலம் மாணவர்கள் சார்ந்து இயங்கக்கூடிய பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவ வழிகாட்டல் ஆலோசகர்கள், விசேட தேவைக்குரிய மாணவர்களின் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் பயன் பெறக்கூடியதாக அமையும்.

கடந்த மாத இதழின் தொடர்ச்சி...

# கிராம மக்களின் வாழ்வும் வளமும்

அபிமான வாசகர் உறவுகளுக்கு அடியேனின் அன்பு வணக்கம். இம்மாதம் நான் தங்களுடன் எமது கிராமங்களில் நாடகக் கலையின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிய தகவல்களைப் பகிர்ந்து கொள்ளப்போகின்றேன்.

முத்தமிழின் மூன்றாம் தமிழாம் நாடகத்தமிழ். எமது கிராமங்களில் கலையாக வளர்ந்து நாடகங்களாக மக்களைக் களிப்பூட்டிய காலங்களை எமது மக்கள் இன்று நினைவு கூர்ந்து பேசுவதுண்டு.

சரி நாம் ஒவ்வொரு கிராமங்களினதும் நாடக வளர்ச்சியைப் பார்க்கலாம். முதலில் 11ஆம் கிராமத்தின் நாடகக்கலை பற்றிக் கூறுகின்றேன். 11ஆம் கிராமத்தில் நாடகக்கலையை தோற்றுவித்தவர் திருவாளர் சுந்தரம்பிள்ளை ஜெகதீசன் அவர்கள்தான். இவர் 1970ஆம் ஆண்டளவில் நாடகக்கலையை ஆரம்பித்ததாக அறியமுடிகிறது. இவர் சுயமாக நாடகங்களை எழுதி ஊர் இளைஞர்களை சேர்த்துக்கொண்டு இயக்கியதோடு அந்நாடகங்களில் தானும் ஒரு பாத்திரத்தில் நடித்திருப்பார். அக்காலத்தில் நாடகங்களுக்கு மக்களிடையே மிகுந்த வரவேற்பு இருந்தது. பெரும்பாலும் அப்போது கோயில் விழாக்களில்தான் நாடகங்கள் காண்பிக்கப்படும். கோயில்களில் இரவுப் பூசைகள் நிறைவடைந்ததும் கோயில்களில் உள்ள நாடக மேடைகளில் நாடகங்கள் இடம்பெறும். நாடகங்கள் முடிவடையும்போது சிலவேளைகளில் விடிந்துவிடும். இரவுப் பொழுது மகிழ்ச்சியாகக் கழிந்ததையிட்டு மனநிறைவோடு மக்கள் வீடு செல்வர். அதுமட்டுமன்றி சிலநாள்க்களுக்கு இரசிகப் பெருமக்கள் அந்த நாடகங்கள் பற்றியே பேசுவதைக் காணலாம். நாடகங்களில் சமூக நாடகங்கள், புராண நாடகங்கள் அரசகதைகளைக் கொண்ட நாடகங்கள் இவற்றுடன் காசிய நாடகங்களும் கட்டாயம் இருக்கும். ஏனெனில் மக்கள் காசிய நாடகங்களை அதிகம் விரும்பி பார்ப்பார்கள். திரு.ஜெகதீசன் ஐயா காலத்தில் குறிப்பிடத்தக்க நகைச்சுவை நடிகராக திரு.பொன்னையா விநாயகமூர்த்தி ஐயா அவர்களைக் கூறியே ஆகவேண்டும். அவர் மேடைக்கு வந்தாலே போதும் மக்கள் விழுந்துவிழுந்து சிரிப்பார்கள். அவர் இயல்பாகவே குறும்புக்காரர் என்பதால் நகைச்சுவைக்கு பஞ்சம் இருக்காது.

அடுத்து, அக்காலத்தின் தீசன் ஐயா காலத்து புகழ் பெற்ற நாடகங்களாக மாவீர தக்கன், அலெக்ஸ்சாண்டர், மார்க்கண்டேயர், பக்தவல்லாளன் போன்ற நாடகங்களைக் குறிப்பிடலாம். அவற்றுள் அலெக்ஸ்சாண்டர், மார்க்கண்டேயர், பக்தவல்லாளன் போன்ற நாடகங்கள் பாடசாலை மண்டபத்தில் பிராண்டமாக ரசிகப்பெருமக்கள் கட்டணம் செலுத்தி பற்றுச்சீட்டு எடுத்துப் பார்த்த நாடகங்களாக அமைந்திருந்தன.



திரு.ஜெகதீசன் ஐயா அவர்கள் எழுத்தாளர், இயக்குநர் என்பதைத்தாண்டி ஒரு சிறந்த நடிகராகவும் திகழ்ந்தார். இவரால் நடிக்கப்பட்ட புகழ் பெற்ற நாடகங்களில் “ரத்தக்கண்ணீர்” நாடகத்தைப்பற்றிக் கூறியே ஆகவேண்டும். நடிகவேள் M.R. ராதாவையே மிஞ்சி விட்டார் என்று பலர் பேசியதைக் கேட்டிருக்கின்றேன். திரு. தீசன் அவர்களது அம்மா அதைப்பார்த்து அழுதுவிட்டார் என்று கூறினார்கள்.

அவரது நடிப்புக்கு எடுத்துக்காட்டு இந்நாடகமாகும். சரி இந்த நாடகங்கள் அக்காலத்தில் எவ்வாறு அரங்கேற்றப்பட்டன என்பதை அறிந்தீர்களாக இருந்தால் அன்பர்களுக்கு வியப்பாக இருக்கும். மின்சார வசதியில்லை. பாடல்களைக்கேட்டு பழகக்கூடிய வாய்ப்பு இல்லை. அப்படியானால் எப்படிப் பழகி அரங்கேற்றினார்கள் தெரியுமா? மண்ணெண்ணை விளக்கு வெளிச்சத்தில் நாடகங்களைப் பழகுவார்கள். பாடல்களை சினிமா படங்களில் பார்த்த ஞாபகம் இருந்தால் அதை வைத்தும், வாய்மூலம் பாடல்களைப் பாடியும்தான் பழகுவதுண்டு, பாடலை நாடக அரங்கேற்ற வேளையில்தான் வாடகை ஒலிபெருக்கிக்காரர் கொண்டு வருவார். அதைக்கேட்டு ஆரம்பமாவதற்கு சற்று



முன்னர் பாடலைப் போட்டு தயாராவார்கள். வெளிச்சம் எப்படி இருந்தது என்றால்? ஆரம்பத்தில் மேடைகளுக்கு பெற்றோல்மக்ஸைப் பயன்படுத்தித்தான வெளிச்சம் பெறப்பட்டது. மேடையில் இரண்டு பெற்றோல் மக்ஸ்கள் இருக்கும். மேடை அலங்காரங்காரங்களில் காட்சிகளுக்கு பின்னணித் திரைச்சீலைகள் காணப்படும். தீசன் ஐயா அவர்கள் தானே ஓர் ஓவியர் என்பதால் பல திரைச்சீலைகளை வரைந்து வைத்திருந்தார். அவை காட்சிக்கேற்ப மாற்றிக் காண்பிக்கப்படும். அத்தோடு அரச நாடகங்களுக்கான ஒப்பனைப் பொருள்கள், உபகரணங்கள் போன்றவையும் இவரிடம் காணப்பட்டன. இவ்வாறு இக்கிராமத்தில் நாடகக்கலையைத் தோற்றுவித்து உயிரூட்டிய அவர்கள், 1976ஆம் ஆண்டுகளின் பின்னர் நாடகம் எழுதுவது நடிப்பது போன்றவற்றில் இருந்து விலகியிருந்தார். இவரால் ஆரம்பிக்கப்பட்ட கலைக் கழகமே “புத்தொளி” நாடக மன்றம் ஆகும். அவரின் பின்னர் அவரால் உருவாக்கப்பட்ட இளைஞர்கள் அவரது அனுசரணையோடு பிற இடங்களில் இருந்து (துறைநீலாவணை, கல்லாறு, பாண்டிருப்பு போன்ற இடங்களில்) நாடகப் பிரதிகளைப் பெற்று வந்து வழமை போல் ஆலய விழாக்காலங்களில் கோயில்களில் அரங்கேற்றி வந்தனர். இவர்களது காலத்தில் அரங்கேற்றப்பட்ட ஓர் அரச நாடகமாக “பழிதீர்த்த பாண்டியன்” என்ற நாடகத்தைக் குறிப்பிடலாம். இவ்வாறு இவர்கள் 1980வரை நாடகக்கலையை வளர்த்தனர்.

இதன்பின்னர் இருந்தவர்களுள் ஒருவரான திரு. முத்துக்குமார் வைரமுத்து அவர்கள்தான் சில நாடகங்களை எழுதி இளைஞர்களைக் கொண்டு அவரும் நடித்திருந்தார். அவர் நகைச்சுவையாகப் பேசும் ஆற்றல் உள்ளவராக இருந்ததனால் சிலகாலம் (1983)வரை நகைச்சுவை நாடகங்களில் பெயர்பெற்ற ஒருவராகக் காணப்பட்டார். இவர் நடித்த நாடகங்களில் “ஊர் சுற்றும் பொன்னம்மா” எனும் ஒரு வயதான பாட்டியின் கதையைக்கொண்ட நாடகம் பெரிதும் பேசப்பட்ட ஓர் நகைச்சுவை நாடகமாகும். திரு. வைரமுத்து அவர்களே பொன்னம்மாவாக நடித்திருந்தார். அதுபோன்று இன்னும் ஒரு பெயர்பெற்ற நாடகம்தான் “தெருவில் நின்று வேலை தேடுகிறார்” என்ற நகைச்சுவை நாடகமாகும். திரு. வைரமுத்து அவர்களின் காலத்தில் அவரோடு சேர்ந்து நடித்த நடிகர்களில் திரு.க.மகாலிங்கம் (போடியார்) அவர்களும் ஒரு சிறந்த நகைச்சுவை நடிகராகக் காணப்பட்டார்.

சா.செல்வசிகாமணி
ஓய்வுநிலை அதிபர்
மத்தியமுகாம்.



NEURALINK

# இந்த கருவி மட்டும் இருந்தால் போதும்...!

# பிறப்பிலிருந்தே காது கேளாதவர்களும் கேட்கும் திறனைப் பெறலாம்

பிறப்பிலிருந்தே முழுமையாகக் காது கேளாதவர்களுக்குக் கூட, நியூராலிங்க் Neuralink சிப் மீண்டும் கேட்கும் திறனை வழங்கும் என எலன் மஸ்க் தெரிவித்துள்ளார்.

காது கேளாமையின் ஆபத்துகள் பற்றியும், காது கேளாமைக்கு தற்போது வரை நிரந்தர சிகிச்சை ஏதும் இல்லை என்றும் பயனர் ஒருவர் பகிர்ந்த பதிவுக்கு பதிலளித்த எலான் மஸ்க், பிறப்பிலிருந்தே காது கேட்காவிட்டாலும் நியூராலிங்க் சிப் மூலம் கேட்கும் திறனைப் பெற முடியும் என்று கூறியுள்ளார்.

பிறப்பிலிருந்தே முழுமையாகக் காது கேளாதவர்களுக்குக் கூட, நியூராலிங்க் சிப் மீண்டும் கேட்கும் திறனை வழங்கும் என எலன் மஸ்க் தெரிவித்துள்ளார். நியூராலிங்கின் இந்த சாத்தியமான முன்னேற்றம், உலகளவில் மருத்துவத் துறையில் புரட்சியை ஏற்படுத்தும் என்று நிபுணர்கள் கருதுகின்றனர்.

எக்ஸ் தளத்தில், காது கேளாமையின் ஆபத்துகள் பற்றி எச்சரிக்கும் ஒரு பயனரின் பதிவுக்கு எலான் மஸ்க் பதிலளித்தார். அதன்படி, பயனர் ஒருவர், காது கேளாமைக்கு தற்போது வரையில் நிரந்தர சிகிச்சை ஏதும் இல்லை என்றும், இது மூளையின் சுருக்கத்தை துரிதப்படுத்தி, டிமென்ஷியா அபாயத்தை அதிகரிக்கக்கூடும் என்றும் தெரிவித்திருந்தார். இதற்கு பதிலளித்த மஸ்க், "பிறப்பிலிருந்தே காது கேளாதவர்களுக்குக் கூட நியூராலிங்க், மூளையின் ஒலி நியூரான்களை நேரடியாகச் செயல்படுத்துவதன் மூலம் கேட்கும் திறனை மீட்டெடுக்க உதவ முடியும். இது தெளிவான மற்றும் சாத்தியமான வழியாகும்" என்று தெரிவித்தார்.

இதற்கு, முந்தைய மனித சோதனை தொடர்பான தகவல்களும் முக்கியத்துவம் வகிக்கின்றன. மூன்று நபர்கள் இதுவரை நியூராலிங்க் சிப்பை பெற்றுள்ளனர் என்றும், அவர்கள் அனைவருமே தற்போது வரை நலமாகவே உள்ளனர் என்றும் எலான் மஸ்க் குறிப்பிட்டுள்ளார். லாஸ் வேகாஸில் நடைபெற்ற நேரடி நிகழ்வு ஒன்றில் அவர் இதனை உறுதிப்படுத்தினார். முதலாவது பயனர், வீடியோ கேம்கள் மற்றும் சதுரங்கம்








விளையாட நியூராலிங்க் சிப்பைப் பயன்படுத்தியதாகவும், இரண்டாவது பயனர் 3D வடிவமைப்பு சாஃப்ட்வேர் பயிற்சி பெறத் தொடங்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது. இருவரும் முதுகுத்தண்டு காயம் காரணமாக இயல்பு வாழ்க்கையில் பல சவால்களை எதிர்கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

2025இல், 20 முதல் 30 பேருக்கு நியூராலிங்க் சிப் பொருத்தும் திட்டம் உள்ளது என்றும், சிப்பின் புதிய பதிப்பு அதிக மின்முனைகள், மேம்பட்ட அலைவரிசை, நீண்ட பேட்டரி ஆயுள் ஆகியவற்றுடன் வருகிறது என்றும் மஸ்க் தெரிவித்தார். இப்போது, சொல்பாடிகள் (Cochlear Implants) அல்லது செயற்கைக்காது (Hearing Aids) போன்ற சாதனங்களைத் தவிர, பிறப்பிலிருந்தே முழுமையாகக் கேட்க முடியாதவர்களுக்கே நேரடியாக மூளையின் ஒலி பகுதியைத் தூண்டும் இந்த நுண்ணறிவு சிப், ஒரு சாத்தியமான சிகிச்சை மாற்றாக உருவெடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சாதனங்கள் அனைத்தும் காதின் உட்கட்டமைப்புகள் அல்லது செவி நரம்புகள் இயங்குவதை அடிப்படையாகக் கொண்டவை. ஆனால், நியூராலிங்க் அப்படி இல்லாமல், நேரடியாக மூளையின் ஒலி பகுதியைத் தூண்டுவதன் மூலம் வேலை செய்கிறது. இதனால், காது அல்லது செவி நரம்புகள் முற்றிலும் செயலிழந்தவர்களாக இருந்தாலும், பிறப்பிலிருந்தே கேட்க முடியாதவர்களாக இருந்தாலும் கூட, அவர்கள் ஒலியை உணர்வது சாத்தியமானதுதான் என்பதை இது நிரூபிக்கிறது.

கேட்கும் திறனை மீட்டெடுக்கும் அம்சம் எப்போது மற்றும் எப்படி பரிசோதிக்கப்படும் என்பதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்புகள் இன்னும் வெளியிடப் படவில்லை. இருப்பினும், இந்த முன்னேற்றம் எதிர்காலத்தில் காது கேளாதவர்களுக்கான மூடிய கதவுகளைத் திறக்கும் என்கிற நம்பிக்கையை உருவாக்கி இருக்கிறது.

ICT UNIT
DIVISIONAL SECRETARIAT,
NAVITHANVELI

கடந்த மாத இதழின் தொடர்ச்சி...



## காணிச் சட்டங்கள்

# அரசகாணி ஆவணங்களும் அடுத்துரிமை நியமனமும்

NMM A.Sujan, Colonization Officer

## ஆவணத்தைப் பரிசீலனை செய்யும் போது மக்களுக்குள்ள உரிமை

முன்னர் செய்த பெயரிடல் இரத்தாகும் வரைக்கும் வேறு பெயரிடல் தொடர்பாக எதுவித ஆவணமும் பதிவு செய்யக் கூடாது

(1) ஏதாவது காணித்துண்டு அல்லது அனுமதிப் பத்திரத்தின் கீழான காணிக்கு பின் உரிமையாளராக யாராவது பெயரிடப்பட்டு ஆவணம் பதிவு செய்த பின்பு, அந்த பெயரிடல் ஆவணம் முறைப்படி பதிவு செய்த ஆவணம் மூலம் இரத்துச் செய்யப்படும் வரை வேறு நபர் அக் காணிக்கு அல்லது காணித்துண்டுக்கு அடுத்துறுபவராக நியமிப்பதற்கு எண்ணும் ஆவணத்தை பதிவு செய்யாது இருக்க வேண்டும்.

எவ்வாறெனினும், பதிவு செய்யப்பட்ட பெயரிடல் இரத்துச் செய்து அதற்காக வேறு நபர் பெயரிடப்படல் ஒரே ஆவணத்தில் செய்தல் சட்ட ரீதியானதாகும். எனினும் இந்தப் பிரிவில் என்ன குறிப்பிட்டிருப்பினும், இங்கு இரத்துச் செய்தல் மற்றும் பெயரிடல் எனும் இரண்டும் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணத்தைப் பதிவு செய்யப்பட முடியும். அவ்வாறு முறைப்படி பதிவு செய்த பின்பு அவ்வாவணம் முன்பு பதிவு செய்த பெயரிடலை இரத்துச் செய்யும் ஆவணமாகவும், புதிதாக ஒருவரை பெயரிட்ட ஆவணமாகவும் கவனத்தில் கொள்ள முடியும்.

(2) இப் பிரிவில் குறிப்பிட்ட எதுவும் காணி உரிமையாளரின் அல்லது அனுமதிப் பத்திரக்காரரின் இறுதி விருப்பாவணத்தில் குறிப்பிட்டுள்ள பெயரிடல் அல்லது பெயரிடலை இரத்துச் செய்தல் தொடர்பாக செல்லுபடியற்றதாக வேண்டும்.

உரிமையாளரின், அனுமதிப்பத்திரக்காரரின் இறுதி விருப்பாவணத்தில் பெயரிடல் அல்லது பெயரிடலை இரத்துச் செய்தல் செய்யமுடியும்

இவ் அத்தியாயத்தின் கீழ் முறைப்படி பதிவு செய்த ஆவணத்தில் யாரும் காணித்துண்டின் அல்லது அளிப்புபத்திரம் மூலம் பாராதீனப்படுத்தப்பட்ட காணியின் பின் உரிமையாளராக யாரும் பெயரிடல் அல்லது அதனை இரத்துச் செய்தல் அல்லது அந்தப் பெயரிடல் மற்றும் இரத்துச் செய்தல் எனும் இரண்டையும் அந்தக் காணியின் உரிமையாளரின் அல்லது அனுமதிப்பத்திரக்காரரின் இறுதிவிருப்பாவணத்தில் செய்ய முடியும்.

இறுதி விருப்பத்தில் செய்த பெயரிடல் அல்லது பெயரிடலை இரத்துச் செய்தல் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு பதிவு செய்யப்பட வேண்டும் காணித்துண்டின் உரிமையாளர் அல்லது அனுமதிப்பத்திரக்காரர் இறுதி விருப்பாவணத்தில் குறிப்பிட்டுள்ள பெயரிடல் அல்லது பெயரிடலை இரத்துச் செய்தல் காணித்துண்டு சொந்தக்காரரின்

அல்லது அனுமதிப்பத்திரக்காரரின் மரணம் ஏற்பட்ட திகதியில் இருந்து மூன்று மாதத்தினுள் குறித்தபடி பதிவு செய்யப்படாவிடின் இரத்துச் செய்யப்பட்டதாகும்.

இறுதி விருப்பத்தில் செய்த பெயரிடல் அல்லது பெயரிடலை இரத்துச் செய்தலை இரத்து செய்வதற்கு புறோபட் (PROBAT) அனுமதிப்பத்திரம் அவசியம்

(1) காணித்துண்டின் உரிமையாளர் அல்லது அனுமதிப்பத்திரக்காரரின் இறுதிவிருப்பாவணத்தில் குறிப்பிட்டுள்ள பெயரிடல் அல்லது பெயரிடலை இரத்துச் செய்தலை பதிவு செய்வதற்கு விண்ணப்பிப்பவர் மூலம் அந்த இறுதி விருப்பம் புறோபட் அனுமதிப்பத்திரத்திற்கு (மரண சாசனத்தில் அதிகார பூர்வமாக அளிக்கப்பட்ட (நகல்) பிரதி) விண்ணப்பிப்பதாக அவ்வாறு விண்ணப்பிக்கும் மாவட்ட நீதிமன்று பதிவாளர் மூலம் குறித்த படிவத்தில் எழுதி கையொப்பம் இட்ட சான்றிதழ் மற்றும் அந்த இறுதி விருப்பாவணத்தில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி பதிவு செய்யும் உத்தியோகத்தருக்கு உறுதிப்படுத்தினால் அன்றி பதிவு செய்ய முடியாது.

(2) காணித்துண்டின் உரிமையாளர் அல்லது அனுமதிப்பத்திரக்காரரின் இறுதி விருப்பாவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெயரிடல் அல்லது பெயரிடலை இரத்துச் செய்தல் அந்த இறுதி விருப்பு புறோபட் அனுமதிப்பத்திரம், குறித்த அதிகாரமுள்ள நீதிமன்ற கட்டளையினால் நிராகரிக்கப்பட்டால் அல்லது தள்ளுபடி செய்யப்பட்டால் அல்லது ஒத்திவைக்கப்பட்டால், கிடைத்தால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது. எனினும், காணியின் உரிமை அங்கு உரிமையாளரின் அல்லது அனுமதிப்பத்திரக்காரரின் மரணத்தின் பின்பு பெயரிடல் அல்லது பெயரிட்டதை இரத்துச் செய்தலை செய்யாது மாற்றப்பட வேண்டும்.

## பதிவு செய்த பெயரிடலை இறுதி விருப்பினால் இரத்துச் செய்வதற்குரிய நிபந்தனை

காணித்துண்டின் உரிமையாளர் அல்லது அனுமதிப் பத்திரக்காரரின் மரணத்தின் முன்பு முறைப்படி பதிவு செய்தல் ஆவணத்தில் செய்யப்பட்டிருப்பினும் அவரின் மரணம் ஏற்படும்போது அது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பினும் கீழ்க் குறிப்பிடப்படும் விடயம் பூரணமாகாதவரை அவரின் இறுதி விருப்பம் இரத்தாகக் கூடாது.

(அ) உரிமையாளரின் அல்லது அனுமதிப்பத்திரக்காரரின் மரணத்திற்கு முன்பு பெயரிடப்பட்டு செய்த பதிவு செய்த ஆவணத்தை எழுதிக் கையொப்பமிட்ட திகதியின் பின்புள்ள தினத்தில் இறுதி விருப்பாவணம் தயாரிக்கப்பட்டு கிடைத்திருக்க வேண்டும்.

(ஆ) அந்த பதிவு செய்த ஆவணத்தில் செய்த பெயரிடல் அந்த இறுதிவிருப்பாவணத்தில் விசேடமாக குறிப்பிடப்படுவதோடு அந்தப் பெயரிடல் அங்கு குறிப்பிட்ட வகையில் இரத்துச் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

இறுதி விருப்பத்தில் செய்த பெயரிடல் மற்றும் பெயரிட்டதை இரத்துச் செய்தல் தொடர்பான பொதுவான கொள்கை

விசேடமாக முறையற்ற விதத்தில் தயாரிக்கப்படாதவிடத்து இறுதிவிருப்பாவணத்தைத் தவிர வேறு ஆவணங்களில் பெயரிடல் அல்லது இரத்துச் செய்தல் தொடர்பாக இந்த அத்தியாயத்தில் நடைமுறைகளின் இறுதி விருப்பாவணத்தில் குறிப்பிட்ட நியமித்தல் மற்றும் இரத்துச் செய்தல் தொடர்பாக அவ்வாறே ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

தொடரும்...



# யார் இந்த யூதர்கள்? ஏன் இவர்கள் இப்படி? எப்போது இவர்கள் . . .?

உலக வரலாற்றில் பல்வேறு நாட்டவர்களால் யூதர்கள் பல்வேறு தாக்குதல்களுக்கு உள்ளாகி சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டமை தொடர்பாக மூவாயிரம் ஆண்டுகளுக்கு உட்பட்ட வரலாற்றிலிருந்து அறிய முடிகின்றது. அசீரியா என அழைக்கப்பட்ட ஈராக் நாட்டில் இங்கிலாந்து நாட்டின் குழுவொன்று செய்த ஆய்வில் அடிமைகளாக இருந்த யூதர்களின் நாக்கை அறுத்து, கைகளை வெட்டி, கண்களைக் குருடாக்கி ஈராக்கிய மன்னர்கள் தண்டனை வழங்கியதாக தெரிவித்துள்ளனர்.

நாமெல்லாம் மேலோட்டமாக யூதர்களை மிக அதிகமாக வெறுத்தவர்கள். முஸ்லிம்கள் என்று கூறினாலும், இந்த யூதர்களை அதிகம் வெறுத்தவர்கள் கிறிஸ்தவர்கள். அவர்களின் கடவுளான இயேசுவை சிலுவையில் அறையக் காரணமாக இருந்த இந்த யூதர்கள் எனும் பின்னணியில் கிறிஸ்தவர்களேயாகும். இது ஓர் உண்மையுமாகும். ரோம் சாம்ராஜ்யத்தில் யூதர்கள் எந்த உயர் பதவிகளையும் வகிக்க முடியாது, கிறிஸ்தவர்களுக்கெதிராக சாட்சி சொல்ல முடியாது. அக்காலத்தில் யூதர்கள் கிறிஸ்தவக் குழந்தைகளைக் கொலை செய்து இரத்தத்தினால் மத வழிபாடுகளை நடாத்துவதாக காட்டுத் தீ போல் பரவிய வதந்தியால் யூதர்கள் மறைந்தும் பதுங்கியும் வாழ வேண்டிய நிலை உருவானது.

பதினோராம் நூற்றாண்டு அளவில் ஐரோப்பா முழுவதும் கிறிஸ்தவ தேசமாக மாறி இருந்தது. அந்த சமயத்தில் இயேசுவின் மரணத்திற்கு காரணம் யூதர்கள் என்கின்ற பிரச்சாரம் மேலோங்க மெல்ல மெல்ல யூதர்கள் மீதான தாக்குதல்களும் அதிகரித்தன. இந்நிலையில் வாழ வழியற்ற நிலையில் இருந்த யூத இனத்தவர்களுக்கு அரபு முஸ்லிம்கள் வாழ இடம் கொடுத்தனர். கலீபாக்களின் உதவியால் யூதர்கள் சுயதொழில் மற்றும் வாணிபம் செய்யவும் மத வழிபாடுகளை மேற்கொள்ளவும் உரிமை பெற்றிருந்தனர்.

ஆனாலும் கி.பி 8ஆம் நூற்றாண்டளவில் உமர் கலீபாவாக பதவியேற்ற பின்னர் அனைத்தும் மாற ஆரம்பித்தது. யூதர்கள் அதிக வரி செலுத்த வேண்டும், பெரிய வீடுகள் கட்டக் கூடாது போன்ற இன்னோரன்ன கெடுபிடிகளால் இரண்டாம் தர மக்களாக யூதர்கள் பார்க்கப்படும் நிலை உருவானது. இந்தச் சூழலில் வரலாற்றில் மிக முக்கியமான சிலுவைப்போர் யுத்தம் யூத இன அழிப்பினை அரங்கேற்றியது எனலாம். இஸ்லாமியர்களுக்கு எதிராக கிறிஸ்தவர்கள் இந்த யுத்தத்தினை ஆரம்பித்திருந்தாலும் ஐரோப்பிய சிலுவை வீரர்கள் முதலில் வெட்டி வீழ்த்தியது யூதர்களையேயாகும். இதன் பின் உலகில் பல பாகங்களிலும் தங்கியிருந்த யூதர்களை வெளியேற்றும் படலம் ஆரம்பமானது.

கி.பி 1200இல் இங்கிலாந்திலிருந்து யூதர்கள் வெளியேற்றப்பட்டனர். 1306இல் பிரான்ஸ் யூதர்களை நாடு கடத்தியது. 1355இல் ஸ்பெயினில் பன்னிரெண்டாயிரம் யூதர்கள் படுகொலை செய்யப்பட்டனர். யூதர்களுக்கு எதிரான கோசங்கள் எழுப்பப்பட்டு புரட்டஸ்தாந்து மத முன்னோடியான மார்ட்டின் லூதர்கிங் என்பவரால் பரப்பப்பட்ட கருத்தினால் யூதர்கள் வெறுக்கப்பட்டு உலகெங்கிலும் யூதர்களுக்கெதிராக திரண்டெழுந்த போது தான் இவையனைத்தையும் சேர்த்து அறுபது இலட்சம் யூதர்களை ஹிட்லர் கொன்று குவிப்பதற்கு வித்திட்டது எனலாம். இவ்வாறு பல்வேறு நாடுகளாலும்

துன்புறுத்தப்பட்ட யூதர்கள் தமக்கென ஒரு நாட்டினை கட்டியெழுப்புதல் வேண்டும் என்ற எண்ணம் உருவாகிய போது 1917இல் பிரிட்டிஷ் வெளியுறவு செயலாளர் BALFOUR (பல்போர்) யூதர்களுக்கு தனி நாடு ஏற்படுத்தி தரப்படும் என்கின்ற பிரகடனத்தை வெளியிட்டார். இதனடிப்படையில் 1948ஆம் ஆண்டு ஐ.நாவின் அங்கீகாரத்துடன் அரபு முஸ்லிம்களின் எதிர்ப்பையும் மீறி பலஸ்தீனத்தில் இஸ்ரேல் எனும் நாடு உருவானது. இதன் போது அங்கு யாரும் ஹிப்ரு மொழி பேசவில்லை எனினும் அந்த மொழியினை மீட்டெடுக்க வேண்டிய தேவையிருந்ததால் அனைத்து யூதர்களுக்கும் ஹிப்ரு மொழி பயிற்றுவிக்கப்பட்டது. அதற்கு முன்னரே பாலஸ்தீன நிலச்சுவாந்தர்களிடம் வாங்கிய நிலத்தில் விவசாயத்தில் ஈடுபட்டனர். என்னதான் யூதர்கள் பாதிக்கப்பட்டிருந்தாலும் அவர்களுக்குள்ளும் பெரும் பணக்காரர்கள் ஏராளமாய் இருந்தார்கள்.

இஸ்ரேலியர்கள் அறிவியலில் உலக நாடுகளுக்கே சவால் விடும் அசாத்திய திறமை படைத்தவர்களாக இருந்தனர். மாசுபட்ட நீரை மறுசுழற்சி செய்து பயன்படுத்தும் தொழில்நுட்பத்தில் உலகில் முதலிடத்தில் உள்ளனர். இதுமட்டுமின்றி சொட்டுநீர் பாசன முறையைக் கண்டு பிடித்தனர். அடிப்படையில் பலவீனமாக இருந்த இஸ்ரேலை மாற்றி விவசாயத்தில் தன்னிறைவடையச் செய்தார்கள். மேலும் தொழில்நுட்பம், விஞ்ஞானம், இசை, சினிமா போன்ற துறைகளிலும் முன்னேற்றகரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு அசுர வளர்ச்சியை அடைந்தனர். இந்த வகையில் இஸ்ரேலியர்களின் முக்கிய செல்வம் அவர்களது மூளையும், கடும் முயற்சியும்தான் உலகின் மொத்தமாக நோபல் பரிசு வழங்கப்பட்ட 902 பேரில் 203 பேர் இஸ்ரேலியர்கள் ஆகும். மருத்துவம்-56 பேர், வேதியியல்-36 பேர், பொருளாதாரம்-32 பேர், இலக்கியம்-15 பேர், அமைதிக்கான நோபல் பரிசு 9 பேருக்கும் வழங்கப் பட்டது. அறிவியல் மேதை அல்பேர்ட் ஐன்ஸ்டீன், மூலதன தந்தை கால்மார்க்ஸ், Face Book நிறுவுனர் மார்க்ஸக்கர்பேர்க், Google நிறுவுனர் லாரிபேர்க், Dell கணணியை வழங்கிய Michel Dell மற்றும் இன்னும் பெயர் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய பல துறைகளில் கொடி கட்டிப்பறப்பவர்கள் இந்த யூதர்கள்தான்.

எது எவ்வாறு இருந்தாலும் எமது இலங்கையுடனான தொடர்புகள் பற்றி பார்ப்போமானால் பலஸ்தீன உரிமைப்போராட்டம் தொடர்பாக 1970ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஐக்கிய நாடுகள் சபையின் 42ஆவது தீர்மானத்திற்கு இஸ்ரேல் உடன்படவில்லை என்பதற்காகவே இலங்கை அரசானது இங்குள்ள இஸ்ரேலிய தூதரகத்தை இழுத்து மூடி அவர்களை வெளியேற்றி தமது எதிர்ப்பை வெளிக்காட்டியது. இதன் மூலம் எந்தவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாத கடுமையான தடைகள் விதிக்கப்பட்டன ஆனால் இதனையே சாதகமாக பயன்படுத்திய இஸ்ரேலின் இராஜதந்திரமான நடவடிக்கையாக தனக்கு எதிர்ப்பான நாடுகளிடம் மிக நிதானமான முறையில் உறவினை ஏற்படுத்தி அவர்களோடு இணைந்து செயற்படுதல் இதற்கமைவாக இலங்கையில் ஏற்பட்ட இன முரண்பாடுகள் தொடர்பான போராட்டங்களில் இலங்கை இராணுவத்திற்கும் பயிற்சிகள் இராணுவ ஆயுதங்களை வழங்கியும் போராளிக்குழுக்களுக்கும் பயிற்சி மற்றும் கடல்வழித் தாக்குதல் ஆயுதங்களையும் வழங்கி தனது இரட்டை நிலைத்தன்மையையும் வெளிக்காட்டியது. பின்னர் முற்றுமுழுதாக இலங்கை அரசுடன் மிகவும் விசுவாசமாக தனது உறவைப் மேம்படுத்த இஸ்ரேல் எத்தனித்தது என்றும் சொல்வதுடன் இராஜதந்திர ரீதியாகவும் காய்களை நகர்த்தியது. இஸ்ரேலின் மொசாட் அமைப்பினது உதவி இன்றி இலங்கையில் ஏற்பட்ட இன போராட்டத்தினை வெற்றிகொள்ள முடியாது என்னும் நிலைக்கு இலங்கை அரசு தள்ளப்பட்டது. இதேபோன்றுதான் முஸ்லிம் நாடான எகிப்திலும் தனது இராஜதந்திர நகர்வுகளை ஏற்படுத்தி அவர்களும் தன்னில் தங்கியிருக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தினார்கள்.

எனவே இலங்கை அரசின் 40 நாடுகளுக்கான வீசாக்கட்டணம் இன்றி வெளிநாட்டவர்கள் இங்கே (இலங்கை) உள்நுழையலாம் என்பதற்கமைவாக இந்த 40 நாடுகளுள் இஸ்ரேலும் உள்ளடங்குகின்றது. இந்த அறிவிப்பு சுற்றுலாத்துறையை மையப்படுத்தியதாகும். அண்மைக்காலமாக இலங்கையில் யூதர்கள் இஸ்ரேலியர்கள் தொடர்பாக பல்வேறு கருத்தாடல்கள் உலாவுகின்றன.

*ஆக்கமும் தேடலும்*
*- கியோா*



# தூய குடிநீரை அணுகுவதற்கான எதிர்காலப் போராட்டங்கள்

நீர் அனைத்து உயிர் வாழிகளினதும் ஆதார சுருதி. பூமியில் உள்ள அனைத்து வகையான உயிரினங்களினதும் இருப்பிற்கு அது மிக மிக முக்கியமான ஒரு வரையறுக்கப்பட்ட வளமாகும். எவ்வாறாயினும், அதிகரித்து வரும் உலகளாவிய மக்கள்தொகையின் தேவைகள், சுற்றுச்சூழல் சீரழிவு மற்றும் காலநிலை மாற்றம் ஆகியன தூய்மையான குடிநீரை அணுகுவதற்கான போராட்டங்கள் நிறைந்த ஒரு எதிர்காலத்தை நோக்கி எம்மைத் தள்ளுகின்றன. இக்கட்டுரையானது உலகம் எதிர்கொள்ளவிருக்கும் சுத்தமான நீரின் பற்றாக்குறையுடன் தொடர்புடைய சவால்கள் மற்றும் சாத்தியமான விளைவுகளை ஆராய்வதோடு, இந்த நெருக்கடியை எதிர்கொள்வதற்கான முன்முயற்சிகளின் கட்டாயத்தைப் பற்றியும் விவாதிக்கிறது.

## மக்கள்தொகை வளர்ச்சி மற்றும் நகரமயமாக்கல்

உலக மக்கள்தொகை தொடர்ந்து அதிகரித்து வருவதால், குறிப்பாக நகர்ப்புறங்களில், நீருக்கான தேவை அதிகரித்து வருகிறது. விரைவான நகரமயமாக்கல், அதிகரித்த சூழல் மாசுபாடு, திறமையற்ற நீர் முகாமைத்துவம் மற்றும் பொருத்தமற்ற உட்கட்டமைப்புகள் போன்றன சுத்தமான குடிநீர் கிடைப்பதில் சிரமத்தை ஏற்படுத்துகின்றன.

## காலநிலை மாற்றம் மற்றும் நீர் பற்றாக்குறை

காலநிலை மாற்றம் மழை வீழ்ச்சி முறைகளை மாற்றுகிறது, சில பகுதிகளில் அடிக்கடி கடுமையான வறட்சியும் மற்றும் சில பகுதிகளில் கடுமையான வெள்ளமும் ஏற்படுகின்றன. இந்தக் காலநிலை மாற்றங்கள் நீர்ப் பற்றாக்குறையை அதிகப்படுத்துகின்றன, இதனால் மனிதர்கள் நம்பகமான சுத்தமான குடி நீரை அணுகுவது கடினமாக்கப்படுகின்றது. வெப்பநிலை மற்றும் மழை வீழ்ச்சியில் ஏற்படும் மாற்றங்கள் நீர் ஆதாரங்களின் தரத்தைப் பாதிப்பதுடன் அவற்றில் மாசுபாட்டினையும் ஏற்படுத்துகின்றன.

## தொழில்துறை மற்றும் விவசாய நடைமுறைகள்

தொழில்துறை நடவடிக்கைகள் மற்றும் நவீன விவசாய நடைமுறைகள் பெரும்பாலும் இரசாயனங்கள், பார உலோகங்கள் மற்றும் உரங்கள் உள்ளிட்ட மாசுபடுத்திகளை நீர் ஆதாரங்களுடன் சேர விடுவதன் மூலம் அவற்றை மாசுபடுத்துகின்றன. விவசாய வயல்கள் மற்றும் தொழில்துறை தளங்களில் இருந்து வெளியேறும் நீரானது ஆறுகள் குளங்களில் உள்ள நீரின் தரத்திற்கு குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. இதனால் பாதுகாப்பான குடிநீர் விநியோகத்தை உறுதி செய்வது சவாலாக உள்ளது.

## நிலத்தடி நீர் இருப்பு குறைதல்

பல பிராந்தியங்கள் நீர்த் தேவைக்காக நிலத்தடி நீரை பெரிதும் நம்பியுள்ளன. பெரும்பாலும் விவசாய பாசனத்திற்காக நிலத்தடி நீரை அதிகமாக பிரித்தெடுப்பது, நீர்நிலைகள் குறைவதற்கு வழிவகுக்கிறது. இந்த நிலத்தடி நீர்த்தேக்கங்கள் சுருங்குவதால், மீதமுள்ள நீர் மாசுபடுவதற்கு அதிக வாய்ப்புள்ளது, இது நுகர்வுக்கு தகுதியற்றதாக மாறும்.

## நீர் முகாமைத்துவம் மற்றும் அணுகல் வேறுபாடுகள்

சமத்துவமற்ற நீர் முகாமைத்துவம் மற்றும் விநியோகம் மக்களிடையே சுத்தமான நீரை அணுகுவதில் ஏற்றத்தாழ்வுகளுக்கு வழிசமைக்கிறது. பெரும்பாலும் அரசியல் மற்றும் பொருளாதார பலம் இல்லாத விளிம்புநிலை சமூகங்கள், நீர்ப் பற்றாக்குறையால் அதிகளவில் பாதிக்கப்படுகின்றன. தேவை அதிகரிக்கும் போது, நீர் ஆதாரங்கள் மீதான மோதல்கள் பரவலாகி, சமூக மற்றும் புவிசார் அரசியல் பதட்டங்களைக்கூட அதிகரிக்கச்செய்யலாம்.

## தொழில்நுட்ப மற்றும் உள்கட்டமைப்பு சவால்கள்

நீர் சுத்திகரிப்பு தொழில்நுட்பங்களை உருவாக்குவதற்கும் செயல்படுத்துவதற்கும் குறிப்பிடத்தக்க முதலீடுகள் தேவைப்படுகின்றன. பல பிராந்தியங்கள், குறிப்பாக குறைந்த வருமானம் உள்ள நாடுகள், தேவையான உட்கட்டமைப்பை நிறுவுவதில் மற்றும் மேம்பட்ட சுத்திகரிப்பு முறைகளைப் பின்பற்றுவதில் சவால்களை எதிர்கொள்கின்றன. தொழில்நுட்பம் மற்றும் நிபுணத்துவத்திற்கான அணுகல் பற்றாக்குறை, தேவைப்படுபவர்களுக்கு சுத்தமான நீரை வழங்குவதற்கான முயற்சிகளைத் தடுக்கிறது.

## எதிர்காலப் போராட்டங்களைத் தணித்தல்
## பாதுகாப்பு மற்றும் நிலையான நடைமுறைகள்

நீர் பாதுகாப்பு நடைமுறைகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் நிலைபேறான விவசாய மற்றும் தொழில்துறை முறைகளைப் பின்பற்றுதல் ஆகியவை தூய குடிநீருக்கான எதிர்காலப் போராட்டங்களை தணிக்க இன்றியமையாத படிமுறைகளாகும். திறமையான நீர்ப்பாசன நுட்பங்களை ஊக்குவித்தல், நீர்-செறிவான தொழிற்றுறை செயல்முறைகளை குறைத்தல் மற்றும் நீர் மறுசுழற்சி முயற்சிகளை செயல்படுத்துதல் ஆகியவை இதில் அடங்கும்.

## உட்கட்டமைப்பில் முதலீடு

சுத்தமான நீருக்கான நம்பகமான அணுகலை உறுதிசெய்ய, அரசாங்கங்களும் சர்வதேச நிறுவனங்களும் வலுவான நீர் உட்கட்டமைப்பில் முதலீடு செய்ய வேண்டும். விநியோக அமைப்புகளை மேம்படுத்துதல், கழிவு நீர் சுத்திகரிப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் மீள்நிலை நீர் முகாமைத்துவக் கட்டமைப்பை நிறுவுதல் ஆகியவை இதில் அடங்கும்.

## சமூக கல்வி மற்றும் அதிகாரமளித்தல்

பொறுப்பான நீர்ப் பயன்பாடு, துப்புரவு நடைமுறைகள் மற்றும் நீர் ஆதாரங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் பற்றி சமூகங்களுக்குக் கற்பிப்பது, நீர்ப் பாதுகாப்பு செயற்கிரமத்தில் பங்கெடுக்கும் அமைப்புகளுக்கு உறுதுணையாய் அமையும். சமூகத்தை அடிப்படையாய்க் கொண்ட முன்முயற்சிகள் நிலையான நீர் முகாமைத்துவத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை நல்கும்.

## காலநிலை மாற்றம் தணிப்பு

காலநிலை மாற்றத்தை நிவர்த்தி செய்வது நீர் ஆதாரங்களைப் பாதுகாப்பதில் மிக முக்கியமானது. பச்சை வீட்டு வாயு உமிழ்வைக் குறைப்பதற்கான முயற்சிகள் மாறிவரும் காலநிலை முறைகளுக்கு ஏற்றவாறு நீர் கிடைப்பதில் தீவிர வானிலை நிகழ்வுகளின் தாக்கத்தைக் குறைக்க உதவும்.

## சர்வதேச ஒத்துழைப்பு

நீர்ப் பற்றாக்குறைக்கு புவிசார் அரசியல் எல்லைகள் எதுவும் தெரியாது என்பதால், சர்வதேச ஒத்துழைப்பு மிக முக்கியமானது. தூய்மையான குடிநீருக்கான அணுகலை உறுதி செய்யும் உலகளாவிய சவாலை எதிர்கொள்ள, அறிவு, தொழில்நுட்பங்கள் மற்றும் வளங்களைப் பகிர்ந்து கொள்ள நாடுகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

எதிர்காலத்தை நாம் உற்று நோக்கும்போது, தூய குடிநீரை அணுகுவதற்கான போராட்டங்கள் தோன்ற ஆரம்பித்துள்ளன. இந்த சவால்களை வெற்றிகரமாக வழிநடாத்த, ஒரு ஒருங்கிணைந்த மற்றும் உலகளாவிய முயற்சி தேவை. நிலைபேறான நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலமும், உட்கட்டமைப்பில் முதலீடு செய்வதன் மூலமும், சமூகங்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் நீர்ப் பற்றாக்குறைக்கான மூல காரணங்களை நிவர்த்தி செய்தல் போன்றன மூலமும், வாழ்க்கையின் அடிப்படையான நீர் ஆதாரங்கள் வரும் தலைமுறைகளுக்கும் தொடர்ந்து பாய்வதை உறுதிசெய்ய நாம் பாடுபடலாம். நீர்ப் பாதுகாப்பின் எதிர்காலம் நமது கூட்டு அர்ப்பணிப்பைப் பொறுத்தது.

பிரபாகரன் ஹிருஷிகேஷ்
பாண்டிருப்பு




# கணிதம் இல்லாமல் வாழ்வு இல்லை

ரவிவர்மன் லர்ஷினா, கல்முனை

கணிதம் என்றால் பலருக்கு பாடப்புத்தகங்களில் உள்ள எண்கள், சமன்பாடுகள், சூத்திரங்கள் மட்டும் நினைவுக்கு வரும். ஆனால் உண்மையில், கணிதம் என்பது வெறும் பாடமல்ல அது உயிர் அங்கிகளின் நாடி, நாளங்களில் ஓடும் குருதி போன்றது. நமது சுவாசம் முதல் உலகின் இயங்குமுறை வரை, அனைத்திலும் கணிதம் இடம்பிடித்துள்ளது. "கணிதம் இல்லாமல் வாழ்வு இல்லை" என்பதற்கு காரணம், அது நேரடியாகவும் மறைமுகமாகவும் வாழ்க்கையின் ஒவ்வொரு விடயத்திலும் செல்வாக்கு செலுத்துவதே ஆகும்.

## 1. கணிதம் - வாழ்க்கையின் அடித்தளம்

பழங்காலம் முதலே மனிதர்கள் தங்கள் வாழ்வில் கணிதத்தைப் பயன்படுத்தி வந்துள்ளனர். வேட்டையாடும் காலத்திலேயே, எத்தனை நாட்கள் வேட்டையாடினார்கள், எத்தனை விலங்குகள் பிடித்தார்கள், அவற்றை எவ்வாறு பகிர வேண்டும் என்றெல்லாம் எண்ணிக்கை தேவைப்பட்டது. பின்பு விவசாய காலத்தில் விதை இடும் பரப்பு, பயிர் வளர நேரம், அறுவடை அளவு - இவை அனைத்தும் கணித அறிவால் தீர்மானிக்கப்பட்டன.

இன்றைய உலகில், கணிதம் இல்லாமல் ஒரு நாள் கூட வாழ இயலாது. காலம், தூரம், எடை, விலை, வட்டி, வேகம் - அனைத்தும் கணிதத்தின் அளவீடுகளே.

## 2. அன்றாட வாழ்க்கையில் கணிதத்தின் பங்கு

### அ. நேர முகாமைத்துவம்

நாம் எழும் நேரம், வேலைக்கு செல்கின்ற நேரம், உணவு சமைக்கும் நேரம் - இவை அனைத்தையும் நிமிடங்கள், மணித்தியாலங்கள் என்ற அளவுகளில் கணக்கிடுகிறோம்.

### ஆ. பணப் பரிவர்த்தனை

பொருட்களை வாங்கும்போது விலை கணக்கிடுவது, தள்ளுபடி கணக்கிடுவது, சம்பளத்திலிருந்து செலவுகளை நிர்ணயிப்பது - அனைத்தும் கணிதமே.

### இ. சமையல்

ஒரு உணவைச் சமைக்க தேவையான அளவு அரிசி, நீர், மசாலா - அனைத்தும் அளவீட்டின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

### ஈ. பயணம்

தூரம், பயண நேரம், வேகம், எரிபொருள் செலவு - எல்லாவற்றையும் கணிதமே நமக்குத் தெரிவிக்கிறது.

## 3. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் கணிதம்

அறிவியல் ஆராய்ச்சிகள் அனைத்தும் கணிதத்தின் ஆதாரத்திலேயே நடைபெறுகின்றன. விண்வெளி

ஆய்வுகள், மருத்துவ கருவிகள், கணினி நிரலாக்கம், மொபைல் போன் செயலிகள், இணையம் - இவை அனைத்தும் கணித சூத்திரங்கள், கணக்கீடுகள், தரவுகள் ஆகியவற்றின் விளைவுகளேயாகும்.

உதாரணம்:

விண்வெளி - ராக்கெட் செலுத்தும் திசை, வேகம், ஈர்ப்பு விசை ஆகியவற்றை கணக்கிடாமல் விண்வெளி பயணம் சாத்தியமில்லை.

மருத்துவம் - நோயாளியின் இரத்த அழுத்தம், குளுகோஸ் அளவு, மருந்து அளவு - அனைத்தும் துல்லியமான கணக்கீட்டின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றன.

## 4. பொருளாதாரம் மற்றும் வணிகத்தில் கணிதம்

வணிக உலகில், இலாபம், நட்டம், முதலீடு, வட்டி, வரி, பங்குச் சந்தை - அனைத்தும் கணிதத்தைச் சார்ந்தேயுள்ளன. வியாபாரத்தில் ஒரு சிறிய தவறான கணக்கீடும் பெரிய இழப்புக்கு வழிவகுக்கும்.

பொருளாதாரத்தில், நாடு முழுவதும் உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதி, நிதி திட்டங்கள் - எல்லாவற்றையும் புள்ளிவிபரவியல் கணிதம் மூலமே ஆய்வு செய்து முடிவெடுக்கின்றனர்.

## 5. கலை மற்றும் இசையில் கணிதம்

கணிதம் கலை மற்றும் இசையிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. இசையில் தாளம், ஓசை, லயம் - அனைத்தும் நேர அளவீட்டின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன. கட்டடக் கலையில் பரிமாணங்கள், விகிதங்கள், சமச்சீர் வடிவங்கள் - இவை அனைத்தும் கணிதத்தின் அழகிய வடிவங்கள்.

## 6. இயற்கையில் கணிதம்

இயற்கையிலும் கணிதத்தின் இரகசியங்கள் நிறைந்துள்ளன. மலரின் இதழ்கள், சிப்பியின் சுழல் வடிவம், தேனீவட்டங்கள், பனித்துளியின் வடிவம் -இவை அனைத்தும் பிபோனாச்சி வரிசை (Fibonacci numbers), கேத்திர கணிதம் (Geometry) போன்ற கணிதக் கொள்கைகளுக்கு உதாரணமாக உள்ளன. மழை பெய்யும் அளவு, வெப்பநிலை மாறுபாடு, கடல் அலைகள் - அனைத்தையும் கணித மாதிரிகள் (Mathematical models) மூலம் கணிக்க முடிகிறது.

## 7. கணிதம் இல்லாமல் ஏற்படும் சிக்கல்கள்

* கணித அறிவு இல்லாமல் வாழ்வது, திசைகாட்டி இல்லாமல் கடலில் பயணிப்பது போன்றதாகும்.
* பணத்தில் தவறான கணக்கீடு நஷ்டத்தை தரும்.
* நேர முகாமைத்துவம் இல்லாவிட்டால் வாழ்க்கை குழப்பமாகும்.
* அறிவியல், தொழில்நுட்பம், மருத்துவம் ஆகிய துறைகளில் முன்னேற்றம் நிறுத்தப்படும்.

## 8. கல்வி மற்றும் வாழ்க்கை வெற்றியில் கணிதத்தின் பங்கு

மாணவர்களுக்கு கணிதம் கற்றல் மிகவும் முக்கியமானது. அது வெறும் கணக்கீடு திறனை மட்டுமல்லாமல், பிரச்சினை தீர்க்கும் திறன், தர்க்க சிந்தனை, திட்டமிடும் பழக்கம் எனப் பல திறன்களை வளர்க்கிறது.

கணிதத்தில் திறமையானவர்கள், பொறியியல், மருத்துவம், ஆராய்ச்சி, வணிகம், கணினி தொழில்நுட்பம் உள்ளிட்ட பல துறைகளில் முன்னேற வாய்ப்பைப் பெறுகின்றனர்.

கணிதம் என்பது மனித முன்னேற்றத்தின் உயிர்ப்புடன் இயங்கும் சக்தி. அது இல்லாமல் வாழ்க்கை சீரற்றதாகி, உலகம் தன் இயங்கு முறையை இழந்து விடும். எண்கள், அளவீடுகள், சமன்பாடுகள் - இவை அனைத்தும் நம்மைச் சூழ்ந்திருக்கின்றன. ஆகவே, “கணிதம் இல்லாமல் வாழ்வு இல்லை” என்பது வெறும் கூற்று அல்ல் அது வாழ்க்கையின் அடிப்படை உண்மை.

எந்த துறையிலோ, எந்த சூழலிலோ இருந்தாலும், கணிதம் நம்மை வழிநடத்தி, துல்லியமான முடிவுகளை எடுக்க உதவுகிறது. எனவே, நாம் அனைவரும் கணிதத்தை நேசித்து, அதனை வாழ்க்கையின் நண்பனாகக் கொண்டு முன்னேற வேண்டும்.



# இந்து கோயில் விழாக்களில் ஆடம்பரம்

பாலசிங்கம் சஜிந்ரன்
பாண்டிருப்பு

## கிழக்கு இலங்கையில் கோயில்கள் உண்மையான இந்து தத்துவத்திலிருந்து விலகிச் செல்கின்றனவா?

இலங்கையின் கிழக்குப் பகுதியில் உள்ள இந்து கோயில் விழாக்கள் பாரம்பரியமாக புனித நிகழ்வுகளாகக் கொண்டாடப்படுகின்றன, அவை ஆன்மீக தொடர்பு, சமூக ஒற்றுமை மற்றும் தெய்வீக பக்தியைத் தூண்டும் நோக்கம் கொண்டவை. இருப்பினும், சமீபத்திய ஆண்டுகளில், அதிகப்படியான செலவு மற்றும் ஆடம்பரத்தின் போக்கு இந்த சடங்குகளின் ஆன்மீக மையத்தை மறைத்துவிட்டது. பட்டாசுகளின் பயன்பாடு, விலையுயர்ந்த அலங்காரங்கள், சினிமா பாணி இசை நிகழ்ச்சிகள் மற்றும் பிரமாண்ட ஊர்வலங்கள் கோயில் உற்சவங்களில் பொதுவானதாகிவிட்டன. இந்த விழாக்கள் மகிழ்ச்சியானதாகவும் கலாசார ரீதியாக உயிரோட்டமுள்ளதாகவும் தோன்றினாலும், அவை இந்து தத்துவ விழுமியங்களுக்கு முரணாக இருப்பதாக அதிகளவில் விமர்சிக்கப்படுகின்றன. இந்து மதம், அதன் மையக் கருத்தியல்களாக, எளிமை, பணிவு, தனியாள்கள் தம் செயல்கள் பற்றி அகப் பிரதிபலிப்பு செய்தல் மற்றும் அகிம்சையை ஊக்குவிக்கிறது - இந்த ஆடம்பரமான நடைமுறைகளால் அந்த அடிப்படைக் கொள்கைகள் நீர்த்துப்போகும் நிலை ஏற்படுகின்றது.

### மிதமிஞ்சிய கலாசாரத்தின் வளர்ச்சி

இலங்கையின் கிழக்குப் பகுதியில் - மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை போன்ற இடங்களில் பல கோயில் திருவிழாக்களில், கொண்டாட்டங்கள் மத அனுசரிப்புகளிலிருந்து விலகி செல்வம் மற்றும் ஓசை ஒலிகளின் காட்சிகளாக மாறிவிட்டன. உற்சவ ஏற்பாட்டாளர்கள் பெரும்பாலும் பட்டாசுகள், சினிமா பாடல்களைக் கொண்ட பிரமாண்ட இசை நிகழ்வுகள் மற்றும் அலங்கார வளைவுகள் மற்றும் திரைப்படப் பாணியிலான மின் விளக்கு அலங்காரங்கள் ஆகியவற்றிற்கு இலட்சக்கணக்கான ரூபாய்களை செலவிடுகிறார்கள். இந்த விழாக்கள் பெரும்பாலும் பொது நன்கொடைகள், கோயில் வருமானம் அல்லது சமூகப் பங்களிப்புகள் மூலம் நிதியளிக்கப்படுகின்றன, இந்தப் பெருந்தொகைப் பணத்தை சமூக அல்லது மத மேம்பாட்டிற்காக மிகவும் ஆக்கப்பூர்வமாகப் ஏன் பயன்படுத்த முடியாது என்ற கவலை உண்மையான சமய அறிஞர்கள் மத்தியில் எழுகிறது.

மேலும், சில கிராமங்களில், கோயில்கள் அல்லது

சமூகங்களுக்கு இடையே ஆடம்பரத்தில் ஒன்றையொன்று விஞ்ச வேண்டுமென்ற ஒரு ஆரோக்கியமற்ற போட்டியும் கூட நிலவுகிறது. பக்தியை விட செருக்கு மற்றும் பெருமையால் இயக்கப்படும் இந்தப் போட்டி மனப்பான்மை, ஆன்மீக உயர்விலிருந்து மக்களின் கவனத்தை உலோகாயத மனநிலைக்கு மாற்றுகிறது.

## இவ் விழாக்கள் இந்து போதனைகளுடன் முரண்படுதல்

வேதங்கள், ஆகமங்கள், உபநிடதங்கள், பகவத் கீதை, சைவ சித்தாந்தங்கள் போன்றவற்றின் இறையருள் கருத்துகள், நாயன்மார்கள் மற்றும் முனிவர்களின் சரிதங்கள், விவேகானந்தர், ரமண மகரிஷி போன்ற புனிதர்களின் போதனைகள் போன்றன பொருள் ஆசைகளிலிருந்து விடுபடுதல், வழிபாட்டில் எளிமை, ஆன்மீக அறிவைப் பின்தொடர்தல், தன்னலமற்ற செயல் மற்றும் பக்தி ஆகியவற்றை வலியுறுத்துகின்றன. “அன்பே சிவம்” - என்றும் அகிம்சையே வாழ்வியல் வழி என்றும் அவை அழுத்தியுரைக்கின்றன.

இவ்வாறு அழுத்தியுரைக்கப்பட்ட கருத்துகளில் பெரும்பாலானவை ஆலய அறங்காவலர்கள் என தம்மைக் கூறிக் கொள்பவர்கள் சிலராலும், இன்றைய சில இளைஞர்களாலும் காற்றில் பறக்க விடப்பட்டுள்ளன. சத்தமாகவும், வளியை மாசுபடுத்தும் வகையிலும் அமையும் பட்டாசுகளைப் பயன்படுத்துவது மனிதர்களுக்கு மட்டுமல்ல, விலங்குகளுக்கும் சுற்றுச்சூழலுக்கும் இழைக்கப்படும் இம்சையாகும். இந்து தர்மத்தின் அஹிம்சைவாதக் கருத்துக்கு இது முற்றிலும் முரணானது. பட்டாசுகள் காற்று மற்றும் ஒலி மாசுபாட்டை ஏற்படுத்துகின்றன, வயதானவர்கள் மற்றும் நோயாளிகளைத் தொந்தரவு செய்கின்றன, மேலும் விலங்குகளை பயமுறுத்துகின்றன, இதனால் பட்டாசு பாவித்தல் இந்து மதத்தின் அடிப்படை நெறிமுறை போதனைகளை மீறுவதாய் அமைகின்றது.

இதேபோல், சினிமா பாணி இசை நிகழ்ச்சிகள் மற்றும் மத நிகழ்வுகளின் போது ஒலிபெருக்கிகளில் இசைக்கப்படும் திரைப்படப் பாடல்கள் போன்றன, கோயில் உற்சவங்கள் வளர்க்க வேண்டிய தியானம், பக்தி போன்றவற்றில் இருந்து மக்களைத் திசை திருப்புகின்றன. ஆன்மாவைத் தூண்டும் பக்தி இசை அல்லது பாரம்பரிய பஜனைகளுக்குப் பதிலாக, புனித இடங்கள் பொழுதுபோக்கு அரங்குகளாக மாற்றமடைந்து வருவது மிகவும் கேவலமானது.

மேலும், பல பக்தர்களும் சமூகத்தில் உள்ள மக்களும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும்போது, அலங்காரங்கள் மற்றும் ஊர்வலங்களுக்கு பணத்தை அதிகமாகச் செலவிடுவது, தானம் மற்றும் சேவை என்ற இந்து கொள்கைகளுக்கு முரணானது. உண்மையான பக்தி என்பது ஏழைகளுக்கு உதவுதல், பசித்தவர்களுக்கு உணவளித்தல், இளையோருக்கு கல்வி கற்பித்தல் மற்றும் முதியவர்களைக் கவனித்துக்கொள்வது போன்ற விடயங்களில்தான் உள்ளது - இவ்வாறான மேலோட்டமான கண்கவர் காட்சிகளில் அல்ல.

## சமூகம் மற்றும் இளைஞர்களின் மீதான தாக்கம்

இந்த தேவையற்ற ஆடம்பரங்கள் இளைய தலைமுறையினரின் மதம் குறித்த பார்வையையும் மோசமாகப் பாதிக்கின்றன. கோவில் உற்சவங்களை ஆன்மீக வளர்ச்சி, சுய ஒழுக்கம் மற்றும் ஒழுக்கக் கற்றலுக்கான வாய்ப்புகளாகப் பார்ப்பதற்குப் பதிலாக, அவர்கள் அவற்றை வேடிக்கை, நவநாகரீகம் மற்றும் கொண்டாட்டத்துடன் தொடர்புபடுத்தத் தொடங்குகிறார்கள். இங்குள்ள ஆபத்து என்னவென்றால், இந்து மதத்தின் உண்மையான சாராம்சம் - ஒரு ஆழமான தத்துவ மற்றும் நெறிமுறையுடனான வாழ்க்கை முறை ஆகும். இது இந்த உற்சவங்களால் இழக்கப்படுகிறது. மேலும், இத்தகைய கொண்டாட்டங்களுக்கு செலவிடப்படும் பணம் சமூக மேம்பாட்டிற்குச் செலுத்தப்படலாம். புராதன

காலத்தில் ஆலயங்கள் கல்வி மையங்களாக, வைத்திய மனைகளாக, வாழ்க்கை வழிகாட்டி மையங்களாக இருந்துள்ளன என்பது சரித்திரம். இன்று கிழக்கு இலங்கையில் உள்ள பல கோயில்களில் கோயில்களை அடிப்படையாகக்கொண்டு சரியான கல்வித் திட்டங்கள், சுகாதார வசதிகள் அல்லது இளைஞர் வழிகாட்டுதல் மையங்கள் இல்லை. அலங்காரங்கள் மற்றும் ஒலி அமைப்புகளுக்காக செலவிடப்படும் பணத்தில் ஒரு பகுதியாவது அத்தகைய முயற்சிகளுக்கு திருப்பி விடப்பட்டால், சமூகத்தின் ஆன்மீக வாழ்வும் சிறப்பான இவ்வுலக வாழ்வும் பெரிதும் மேம்படும்.

## முன்னோக்கி செல்லும் வழி: வேர்களுக்குத் திரும்புதல்

கோயில் திருவிழாக்களை இந்து தத்துவத்துடன் இணைக்க, சமூகங்கள் மிகுந்த சிந்தனைமிக்க அணுகு முறையை ஏற்றுக்கொள்ள வேண்டும். கோயில்கள் ஆடம்பரத்தை விடுத்து எளிமை, ஆன்மீகம், தூய்மை போன்றவற்றிற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். பட்டாசுகளையும் திரைப்பட இசையையும் விடுத்து பாரம்பரிய இசைக்கருவிகள், வேத மந்திரங்கள் மற்றும் ஆன்மாவை உயர்த்தும் பக்தி பாடல்களை இசைக்கலாம்.

ஆலயங்களுக்கு சேருகின்ற சமூக நிதிகள் கல்வி, சுகாதாரம், விதவைகள் மற்றும் அனாதைகளுக்கான ஆதரவு மற்றும் தார்மீக விழுமியங்களை மேம்படுத்துதல் போன்ற தெளிவான முன்னுரிமைகளுடன் வெளிப்படையாகப் பயன்படுத்தப்பட வேண்டும். மதத் தலைவர்கள், கோயில் குழுக்கள் மற்றும் பெரியவர்கள் முன்மாதிரியாக வாழ்ந்து மக்களை வழிநடாத்த வேண்டும். ஊழலும் வீண் விரயமும் முற்றாக ஒழிக்கப்படல் வேண்டும்.

இந்து சடங்குகள் மற்றும் பண்டிகைகளின் உண்மையான அர்த்தத்தைப் பற்றி இளைஞர்களுக்குக் கற்பிப்பதும் மிக முக்கியம். கோயில்கள் இந்து தத்துவம், யோகா, தியானம்





மற்றும் நெறிமுறை வாழ்க்கை குறித்த அமர்வுகளை நடாத்தலாம். இவ்வாறான நிலையிலேயே மத விழாக்கள் ஆன்மீக விழிப்புணர்வு மற்றும் சமூக முன்னேற்றம் ஆகிய இரண்டிற்கும் பங்களிப்பதை உறுதிசெய்யலாம்.

இலங்கையின் கிழக்குப் பகுதியில் இந்து கோவில்களில் நடைபெறும் ஆடம்பரமான கொண்டாட்டங்களின் போக்கு, இந்து மதத்தின் முக்கிய விழுமியங்களில் இருந்து மக்களை திசை மாற்றிச் செல்லும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. பட்டாசுகள், சினிமா பாணி நிகழ்ச்சிகள் மற்றும் அதிகப்படியான அலங்காரங்கள் கலாச்சார ரீதியாக துடிப்பானதாகத் தோன்றினாலும் கூட, இந்து தத்துவம் ஆதரிக்கும் எளிமை, இரக்கம் மற்றும் அகமுகமான பயணம் ஆகியவற்றிற்கு முரணாக அமைகின்றன. கோயில் சடங்குகளின் புனிதத்தன்மையையும் எதிர்கால சந்ததியினரின் ஆன்மீக ஆரோக்கியத்தையும் பாதுகாக்க, புராதன நம்பிக்கையின் வேர்களுக்குத் திரும்புவது அவசியம் - அங்கு பக்தியானது ஒலி, ஒளி அலங்காரங்கள் அல்லது கேளிக்கைகளால் அல்ல, மாறாக பணிவு, சேவை மற்றும் சுய-உணர்தல் மூலம் அளவிடப்படுகிறது.

# குறுக்கெழுத்துப் போட்டி இல.19 இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 க | ல | 2 ந் | 3 து | 4 ரை | 5 யா | ட | 6 ல் |
| ம் | ■ | 7 தா | ய | து | த் | ■ | ம |
| 8 பீ | ஷ் | ம | ர் | ■ | 9 தி | ட | ம் |
| ர | ■ | ரை | ■ | 10 வ | ரை | ■ | க |
| 11 ம் | 12 ப | அ | 13 ம் | ல | ■ | 14 செ | ■ |
| ■ | 15 ரு | ந் | ம | து | ■ | 16 ம் | 17 ஓ |
| 18 பா | த் | தி | ■ | ■ | ■ | 19 ம | டை |
| 20 னை | தி | ■ | 21 வெ | ம் | ப | ல் | ■ |

## பாராட்டு பெறுவோர்

**பா. மதுஷா,**
**அன்னமலை-02**

Reload

1st 200/=
2nd 150/=
3rd 100/=



# குறுக்கெழுத்துப் போட்டி இல – 20

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | | ■ | 9 | | | | |
| 10 | | 11 | ■ | 12 | | ■ | ■ |
| | ■ | 13 | 14 | ■ | 15 | 16 | |
| ■ | 17 | ■ | | ■ | ■ | | ■ |
| 18 | | 19 | | | ■ | 20 | 21 |
| 22 | | | | ■ | 23 | ■ | |
| | ■ | | ■ | 25 | | | |

## இடமிருந்து வலம்

01. கிடைப்பதற்கரிய வாய்ப்பு.
08. கதைக்கு இது தேவை என்பர் (திரும்பி).
09. இந்துக்களின் மங்கலப் பொருள் ஒன்று (குழம்பி).
10. வகுப்பறையில் படிப்பது (குழம்பி).
12. நாயைக் கண்டால் இதைக் காணோம் என்பர்.
13. கணவனை இப்படியும் சொல்வர் (திரும்பி).
15. சூரியனை இப்படியும் அழைப்பர்.
18. இதுவும் ஒரு கலைதான்.
20. வெற்றி என்பதன் மறுசொல்.
22. வீணாகுவதை இப்படியும் கூறுவர்.
25. சிறப்பான பொழுது ஒன்று (திரும்பி).

## மேலிருந்து கீழ்

01. ஆண்டு என்பதன் மறுபெயர்.
02. கை என்பதன் மறுசொல் (குழம்பி).
03. தந்தை.
04. வகை என்றும் சொல்லலாம் (குழம்பி).
05. எரித்து முடிந்ததும் கிடைப்பது (குழம்பி).
06. இந்திய நடிகர் ஒருவரை இப்படியும் அழைப்பர்.
07. குறி சொல்லி, வித்தை காட்டும் அலங்கரிக்கப்பட்ட மாடு.
11. ஒன்றின் அரைவாசி.
14. படித்தாலும் கிடைக்கும், விட்டாலும் பறக்கும்.
16. நீர் நிறைத்த இடம் அல்லது கடல் என்றும் சொல்லலாம். (குழம்பி)
17. மரக்கறி வகை ஒன்று (குழம்பி)
18. பெண்களின் கண்ணுக்கு இதை வர்ணிப்பர்.
19. ஆண்களின் பருவங்களில் ஒன்று. (குழம்பி)
21. அகத்தியர் தமிழ் வளர்த்த இடம். (தலைகீழ்)
23. அசுத்தம் என்பதன் மறுசெல். (தலைகீழ்).

**இதில் காணப்படும் குறுக்கெழுத்துப் போட்டிக்கான உருவமைப்பின் கட்டங்களை வெற்றுத்தாளில் தயாரித்து சரியான விடைகளைப் பூர்த்தி செய்து அதனை புகைப்படம் எடுத்து 2025.09.15ஆம் திகதி பி.ப. 04.15 மணிக்கு முன் 0755424333 எனும் வட்சப் இலக்கத்துக்கு அனுப்பவும். அத்துடன் தங்களது பெயர் முகவரி தொலைபேசி இலக்கம் (மீள்நிரப்ப வேண்டிய தொலைபேசி இலக்கம்) என்பவற்றையும் அனுப்பவும்.**



# சர்க்கரை நோய்க்கு சீனாவின் Bio War மூலம் நிவாரணமா?

கி.யோகலிங்கம் (CMSO)
த.சிவானந்தன் (DO)
பு.புவிராஸ் (DO)

உலகிலுள்ள 50 கோடிக்கும் மேற்பட்ட சர்க்கரை நோயாளர்களுக்கான மருந்தை சீனா கண்டுபிடித்துவிட்டது. உண்மையிலேயே 1990ஆம் ஆண்டுக்கு முன்னரான காலப் பகுதியில் எங்கோ ஒருவருக்கு சர்க்கரை நோய் இருப்பதாக கூறப்பட்டது. இதற்கு பின்னரான காலப்பகுதியில் குறிப்பாக 2000ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து இன்றுவரை மனித வர்க்கத்தை ஆட்டிப்படைக்கும், கொல்லாமல் வாழவைத்தே நோயைப் பெருக்குவதற்கான வேலைப்பாடுகள்தான் நடைபெற்றுள்ளது. உலகத்தைப் பொறுத்தவரைக்கும் எந்தத் துறையை எடுத்தாலும் மாபியாக்களின் ஆதிக்கமும் மனிதகுலத்திற்கு எதிரான செயற்பாடுகளும்தான் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. இதில் நன்மைகள் இருந்தாலும் மனித குலத்திற்கெதிரான செயற்பாடுகள் அதிகம். அந்தவகையில் மருத்துவத்துறையில் இந்த மாபியாக்களின் நடவடிக்கைகள் மிகவும் துரிதமாகச் செயற்படுத்தப்பட்டு நீண்ட நாட்களுக்கு சக்கரை நோயை வாழவைத்து அதன் மூலம் வருமானம் ஈட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

உண்மையிலையே சீனாவினால் இம்மருந்து ஒரு வருடத்திற்கு முன்னரே கண்டுபிடிக்கப்பட்டு விட்டது. ஆனால் அதற்கான தருணம் பார்த்து அமெரிக்காவுடனான யுத்தத்தை நேரடியாக நடாத்தாமல் இரத்தம் இன்றி, கத்தி இன்றி, துப்பாக்கி இன்றி, அணுகுண்டு பயன்படுத்தாமல் Bio War என்ற யுத்தத்தை தொடங்குவதற்கு சீனா துணிந்துவிட்டது என்றே கூறலாம். சர்க்கரை நோய்க்கும் அமெரிக்காவுக்கும் என்ன தொடர்பு என்று சிறிது ஆராய்வோமானால் சர்க்கரை வியாதிக்கான மாத்திரைகள், இன்சுலின், மருந்துகள் என்பன தயாரிக்கப்பட்டு இந்த வியாதிக்கான நிரந்தர தீர்வு தராது தொடர்ச்சியான தேவைப்பாடுகளுடன் மனிதனை சாகவிடாது சர்வதேச ரீதியான வியாபாரத்தை நடாத்தி கொள்ளை இலாபம் ஈட்டப்படுகின்றது. இதில் முன்னர் குறிப்பிட்டது போல் 90 வீதமானவை அமெரிக்காவுடையதாகும்.

எனவே, அமெரிக்காவுடன் நேரடி யுத்தத்தை உருவாக்காமல் மறைமுகமாக இந்த Bio War ஆரம்பமாகியிருக்கின்றது. மனிதனை நீண்ட காலமாக ஆக்கிரமித்து ஆட்டிப்படைத்துக்

நாவெளி NAAVELI
பிரதேச செயலகம் ~ நாவிதன்வெளி
ds@navithanveli.ds.gov.lk
திங்கட்கிழமை / மலர் - 20 / இதழ் - 53 / 25 ஆவணி 2025








கொண்டிருக்கும் இந்த சர்க்கரை வியாதிக்கு சீனாவும், புற்றுநோய் வியாதிக்கு ரஸ்யாவும் மருந்துகளைக் கண்டு பிடித்து நிரந்தர தீர்வை வழங்குவதன் மூலம் மருந்து மாபியாக்களின் மூலம் உலகில் பெரும் இலாபத்தை ஈட்டும் அமெரிக்காவுக்கெதிரான பொருளாதார யுத்தம் என்றே கூறலாம். இதன் மூலம் பல கோடிக்கணக்கான வருமானத்தை அமெரிக்கா இழக்கப் போகின்றது என்பது உறுதியாகப் புலப்படுகின்றது.

சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த மருந்தானது நோயெதிர்ப்பினை உருவாக்கும் கணையச்சுரப்பியின் செயற்பாட்டை அதாவது இதன் இயக்கம் குறைவடைவது, இல்லாமல் போவதுதான் சர்க்கரை வியாதியின் உச்சகட்டம். ஆகவே, இந்தக் கணையத்தின் செயற்பாட்டை மீள உருவாக்கி இயற்கையாகவே இன்சுலின் சுரக்கச் செய்யப்பட்டு சக்கரையின் அளவு கட்டுப்படுத்தப்படுகின்றது. எண்ணி 75 நாள்கள் சர்க்கரை நோய் பறந்துவிடும்.

இதற்கான பரிசோதனையில் சீனா ஈடுபட்டு முழுவெற்றி பெற்றுவிட்டது. இன்னும் 2,3 மாதங்களில் உலகம் பூராகவும் கிடைக்கக் கூடிய அளவிற்கு சந்தைக்கு வரப்போகின்றது எந்த விதமான நோய்க்கும் காரணம் கண்டுபிடிக்கப்பட்டால் மருத்துவத்தின் வேலை முடிந்துவிடும்.

உண்மையிலேயே அமெரிக்கா சீனாவின் மீது விதித்த அதீதமான வரிக்குரிய மாற்று நடவடிக்கையாக மௌனமான யுத்தமாக இதைப்பார்க்கலாம். இந்த மௌன யுத்தத்தால் உலக மக்களின் வாழ்வு செழிப்பாகப் போகின்றது. சர்க்கரை நோய் என்ற அரக்கன் முற்றாக அழிக்கப்படப் போகின்றது. யுத்தம் என்றால் உயிர்கள் பல அழிக்கப்படுகின்றன. ஆனால் இவர்களுக்கு இடையில் ஏற்பட்ட இந்த மருத்துவ மாபியாக்களின் யுத்தத்தால் மனிதகுலம் சிறப்பான வாழ்க்கை வாழப் போகின்றது என்பதை நினைக்கையில் உண்மையில் சீனாவிற்கு நன்றியை நாம் தெரிவிக்கத்தான் வேண்டும்.



# சாலை

சாலைகள் நடந்து
பார்த்ததுண்டா.., இல்லையா.?
நாம் சாலையில் நடந்ததை உணருங்கள்
சாலையும் நம்முடன் நடக்கிறது என்பதை
ஓர் நீண்ட பயணத்தில், வழியறியாப் பாதையில்
வழியறிந்து நடக்கிறோம் வழிகாட்டியாய்
சாலையும் நம்முடன் நடக்கிறது
சாலையில் பார்ப்பவைகள் உண்மையல்ல
கடந்து கொள்ள கரைந்து விடும் அனைத்தும்
கற்பனையே

நீளமான சாலையில் நீளாத பயணங்களில்
முகத்திரைகள் மூடியும்
நகர்வலம் அடங்கிடாமல் பட்டுத் தெளிந்து
எல்லைக் கோடுகள் வகுத்த உலகில்
பயணங்களுக்கு உத்தரவாதமில்லை.

யோகராசா கவிதா
அன்னமலை – 01



# விளை நிலம்

**விதைத்தவனை களைப்பாற தூங்க விட்டு**
**பயிரினைத் தூங்க விடாதவள்**
**கார்மேகம் கன மழை வருகையினை**
**எதிர்பார்த்து செழிப்பவள்**

**அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரம்**
**போல்**
**விதைகளுக்கு உயிர் கொடுப்பவள்**
**குயில்களின் வருகையினை ஈர்த்து**
**கண்களுக்கு விருந்தளிப்பவள்**
**செக்க சிவந்த செவ்வானத்துக் கதிரவன்**
**தனது நரம்பில் பாய பயிர் வளர்ப்பவள்**
**உழுதுண்டு வாழும் உழவர்களின்**
**வாழ்விற்கு விடிவு கொடுப்பவள்**
**உற்சாகம் இன்றிக் கிடக்கும் பச்சை நரம்பினை**
**சுறுசுறுப்பாக மாற்றி வாழ் நாளை அதிகரிப்பவள்**
**பட்ட மரத்தினையும் கைபட்டதும் பச்சையாக்கும்**
**அற்புதம் அவள்**

**அலங்காரமின்றி ஆணவம் கொள்ளாக் கரத்தினால்**
**அனைத்தையும் தாங்கும் அன்னையவள்**
**உழவர்களின் செயலை நிதானமாக்கி**
**எண்ணங்களை வாழ்வில் வெற்றியாக்குபவள்**
**கார்விழி நீருண்டு உறிவழி உழவுண்டு**
**இப்பிரஞ்சத்தில் வாழும் பயிர்களை**
**வாழவைக்கும் பொன்மேனியவள்**

எழுதியவர் – கோ.நித்தியா

# மண் மணக்கும் கிராமத்துச் சமையல்

“எங்க அம்மா எண்ணெய் கத்திரிக்கா கொழம்பு வச்சா... ஊரே மணக்கும். அதுதான் கிராமத்து மணம்.” “எங்க பாட்டி, பால் கொழுக்கட்டை செஞ்சுத் தருவாங்க பாரு... எத்தனைச் சப்பிட்டாலும் வேணும் வேணும்னு நாக்கு கேட்டுக்கிட்டே இருக்கும்.”

இதையெல்லாம் வீட்டில் உள்ளவர்கள் ஆசை ஆசையாகச் சொல்லிக் கொண்டிருக்கும்போது, ‘அடடா... இந்தக் கிராமத்துச் சமையல் பத்தி நமக்குத் தெரியாமப் போச்சே...’ என்று பலருக்கும் வருத்தம் எட்டிப் பார்க்கலாம். நம்முடைய வாழ்க்கை முறை, வாய்ப்பின்மை, நேரமின்மை, என்று பல்வேறு காரணத்தினால், கிராமியச் சமையல் நமக்கு கைவரப் பெறாமல் போயிருக்கலாம். அத்தகையோரெல்லாம்...

பாட்டி மற்றும் அம்மாவின் கைப்பக்குவத்தை வீட்டிலுள்ளவர்களின் மனதில் மணக்க வைப்பதற்காக, மண் மணத்தோடு, மிக எளிமையாக சமைத்து அசத்தியுள்ளேன்.

- சுவையரசி

## தேங்காய்ப்பால் முறுக்கு



### செய்முறை :

பச்சை அரிசியைக் கழுவி உலர்த்தவும் பிறகு, அரிசியையும், பாசிப்பருப்பையும் வாசனை வரும்வரை வறுக்கவும். இதை மெஷினில் கொடுத்து மாவாக அரைக்கவும். தேங்காய்ப்பாலில் சர்க்கரை சேர்த்துக் கலந்து வைத்துக் கொள்ளவும். மாவில் பெருங்காயத்தூள், உப்பு, எள், வெண்ணெய் சேர்த்து நன்றாகக் கலந்து, அதில் தேங்காய்ப்பாலை விட்டு முறுக்கு மாவு பதத்தில் நன்றாகப் பிசைந்து கொள்ளவும். கடாயில் எண்ணெய் ஊற்றி, முள் முறுக்கு அச்சில் மாவை நிரப்பி, முறுக்குகளாகப் பிழிந்து சுட்டெடுக்கவும்.

### தேவையான பொருட்கள்

பச்சரிசி - 4 கப், பாசிப்பருப்பு, திக்கான தேங்காய்ப்பால் தலா ஒரு கப், சர்க்கரை அரை டீஸ்பூன், எள், வெண்ணெய் தலா ஒரு டீஸ்பூன், பெருங்காயத்தூள் - கால் டீஸ்பூன், உப்பு, எண்ணெய் - தேவையான அளவு.

# பிரபல சமூக செயற்பாட்டாளர்

## தம்பிப்பிள்ளை சித்திரகுமார்



**சமூக செயற்பாட்டாளர் தம்பிப்பிள்ளை சித்திரகுமார் அவர்களே, உங்களைப் பற்றிய அறிமுகத்தைத் தாருங்கள்**

நான் சம்மாந்துறை பிரதேசத்திலுள்ள மல்வத்தை வள்ளுவர் புரத்தில் தம்பிப்பிள்ளை தவமலர் தம்பதியினருக்கு 1971.11.07 அன்று மகனாகப் பிறந்தேன். எனது கிராமத்திலே உள்ள விபுலானந்தர் மகாவித்தியாலயத்திலே தரம் ஒன்று தொடக்கம் பத்து வரை கற்றேன். சிறுவயதிலேயே இறைவன் மீது தீராத பக்தி கொண்ட நான் எனது கிராமத்தில் உள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்திற்கு தினமும் சென்று தொண்டு செய்வதை வழக்கமாகக் கொண்டவன். 1988ஆம் ஆண்டு ஏற்பட்ட இன பிரச்சினை காரணமாக பாடசாலைக் கல்வியை விட்டு விலக வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டேன். இந் நிலையில் அங்கிருந்து இடம் பெயர்ந்து, கார்மேல் பற்றிமா கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த அகதி முகாமில் 04 வருடங்கள் வாழ்ந்த நிலையில் சுய தொழில் கற்பதற்காக சர்வோதய நிறுவனத்தின் ஊடாக திருகோணமலை சென்று அந்நிறுவனத்தின் தொழிற்கல்விப் பயிற்சிப் பாடசாலையில் ஒரு வருடம் பயிற்சி பெற்று, தச்சு தொழிலில் சிறந்து விளங்கினேன். மீண்டும் தாய் தந்தையுடன் இணைந்து கொண்டு தச்சு தொழில் செய்து அதன் மூலம் கிடைத்த வருமானத்தைக் கொண்டு பெற்றோருடன் வாழ்ந்து வந்தேன். அக்காலப்பகுதியில் அகதி முகாம் நிருவாகத்தில் முதற்கட்டமாக இணைந்து கொண்டு கல்முனை நகர சபை செயலாளரான அ.அழகரெத்தினம் ஐயாவுடன் இணைந்து புதிய நிருவாகம் ஒன்றினை அமைத்துக் கொண்டு பல சேவைகளை மக்களுக்கு செய்து வந்தேன்.

**சமய மற்றும் சமூகப் பணியில் அதிக ஈடுபாடு கொண்ட நீங்கள் உங்களது சமய தொண்டுகள் பற்றி கூறுங்கள்**

பாண்டிருப்பு கிராமத்தில் வசித்து வந்த காலப்பகுதியில் அங்குள்ள திரௌபதை அம்மன் ஆலய கட்டுமானப் பணிகளைச் செய்வதற்கு இளைஞர்களுடன் சேர்ந்து உதவி புரிந்ததோடு அக்கோயிலில் பல தொண்டுகளையும் முன்னெடுத்து வந்தேன். 1996இல் எனது கிராமத்திலுள்ள எனது முன்னோர்கள் ஒரு குடிசை அமைத்து வழிபாடு செய்து வந்த கண்ணகி அம்மன் ஆலய பொருளாளராக மக்களால் தெரிவு செய்யப்பட்டு அதன் வளர்சிக்காக நான்கு வருடங்கள் சேவையாற்றியுள்ளேன்.

இதன் பிற்பாடு குடும்பத்தின் நலனை நோக்காகக் கொண்டு வெளிநாடு செல்லும் நிமித்தம் அப்பதவியிலிருந்து விலகிச் சென்று மூன்று வருடங்கள் வெளிநாட்டில் பணிபுரிந்து, மீண்டும் எனது சொந்தக் கிராமத்திற்கு வந்து மனைவி பிள்ளையுடன் சேரந்து மகிழ்ச்சியாக வாழ்ந்த

நிலையில் இறைவன் மீது கொண்ட ஈடுபாட்டினால் மீண்டும் கிராம மக்களின் விருப்பத்திற்கு இணங்க 2012ஆம் ஆண்டு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் பொருளாளராக மீண்டும் மக்களினால் தெரிவு செய்யப் பட்டு எல்லா வகையிலும் அவ் ஆலயத்தின் கட்டுமானப் பணிகளை நிறைவு செய்து கும்பாபிஷேம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு பல இடங்களுக்கு சென்று உதவிகேட்டு ஆலய வளர்ச்சிக்காக தொடர்ந்தும் என்னை அர்ப்பணித்து வருகின்றேன்.

2014ஆம் ஆண்டு இந்து சமய மக்களது கலாசாரம் அழிந்து விடக்கூடாது என்று எமது கிராம மாணவர்களிடையே ஒழுக்க விழுமியங்களை வழிப்படுத்தி அவர்களை நற்பிரஜையாக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்துடன் இணைந்து அறநெறிக் கல்வியினை போதிப்பதற்காக வாணி அறநெறிப் பாடசாலையினை ஆரம்பித்து வைத்தேன். மேலும் அதனை நிலை நிறுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு அறநெறிப் பாடசாலை அமைக்கப்பட்ட காலம் தொடக்கம் இன்றுவரை கலாசார உத்தியோகத்தர்களாக கடமையாற்றி வருகின்றவர்களுடன் இணைந்து அவர்கள் ஊடாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிதியுதவியுடன் வாணி அறநெறிப்பாடசாலைக்கான கட்டடத்தினை அமைத்து நிலை நிறுத்தியதோடு சுமார் 12 வருடங்களாக பொறுப்பாசிரியராகவும் ஏனையவர்களுக்கு எடுத்துக்கட்டாகவும் எனது பணியை முன்னெடுத்து வருகிறேன்.

### உங்களது குடும்ப வாழ்வு பற்றி சொல்லுங்கள்

1994ஆம் ஆண்டு எனது 22ஆவது வயதில் நாவிதன்வெளி மத்தியமுகாம் - 01 நான்காம் கிராமத்தினைச் சேர்ந்த கிருஸ்ணப்பிள்ளை சிவகாமி அவர்களின் புதல்வியாகிய பிறேமலா என்பவரை பெற்றோரின் சம்மதத்துடன் திருமணம் செய்த கொண்டு அக்கிராமத்திலே நிரந்தரமாக வாழத் தொடங்கினேன். எனது வாழ்வாதாரத்திற்காக வேளாண்மை செய்கை மற்றும் தச்சு தொழிலையும் மேற்கொண்டு வாழ்ந்து வருகிறேன். எனக்கு இரண்டு பெண் பிள்ளைகளும் ஒரு ஆண் மகனுமாக மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

### உங்களது சமூக அபிவிருத்தி பணிகள் பற்றி கூறுங்கள்

2019ஆம் ஆண்டு கிராம அபிவிருத்திக்காக நாவிதன்வெளி பிரதேச சபையுடாக சனசமூக நிலையம் ஒன்றினை உருவாக்கி அதன் தலைவராக செயற்பட்டுள்ளேன். மக்களின் நலன் கருதி எனது பிரிவிற்குட்பட்ட வீதி மின் விளக்குகளைப் பொருத்துவதற்குரிய ஏற்பாடுகளையும் மற்றும் வறுமை நிலையிலுள்ள சில குடும்பங்களுக்கு நீர் வசதியினையும் பெற்றுக் கொடுத்து மக்களுக்கு சேவை செய்துள்ளேன்.

மத்தியமுகாம் பொலிஸ் நிலையத்தினால் உருவாக்கப்பட்ட சிவில் பாதுகாப்புக்குழுவில் எனது கிராமத்திற்கான சிவில் பாதுகாப்பு குழுவின் போசகராக எட்டு வருடங்களாக தொடர்ந்தும் கடமையாற்றி வருகிறேன்.

இவராது மக்கள் சேவை தொடர “நாவெளி” படலையைத் தேடி குழுவின் சார்பில் வாழ்த்துகின்றோம்.

தொகுப்பு:
ஏ.எல்.எம். ஷினாஸ்,
என்.நீலேந்திரன், ஏ.ஏ.அஸீம்

நாவெளி NAAVELI

# நாவெளி

பிரதேச செயலக மாதாந்த இலத்திரனியல் சஞ்சிகை

**நாவிதன்வெளி பிரதேச செயலகத்தினால் மாதாந்தம் தொடர்ச்சியாக வெளிவருகின்ற நாவெளி மின்னிதழுக்கு ஆர்வமுள்ளவர்களிடம் இருந்து ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.**

## பின்வரும் தலைப்புகளில் ஆக்கங்களை அனுப்ப முடியும்.

- வாழ்வியல் தத்துவம்
- பொருண்மியம்
- உலக அரசியல்
- கதைச் சாளரம் (சிறுகதை, மர்மத் தொடர்)
- அறிவுக்களஞ்சியம்
- மாணவர் அரங்கம்
- கல்வி, சட்டம் கற்போம்
- மனிதம் அல்லது மானுடம்
- விளையாட்டும் தேகாரோக்கியமும்
- கதம்பம் - (சமையல் கலை / அழகும் ஆரோக்கியமும் / வீட்டுக் குறிப்பு )
- பெண்ணியம்
- மருத்துவமும் நாமும்
- கவிதைச்சாரல் (மரபுக்கவிதை, நவீன கவிதை, ஹைக்கூ )

## கவனிக்க வேண்டியவை:

- ஒரு ஆக்கம் வேறு ஏதேனும் பிரசுரிப்பில் வந்திருந்தால், அதன் மறு பிரசுரம் என்பதை தாங்கள் உறுதிப் படுத்தல்.
- தகவலுக்கான பொறுப்பினை தாங்கள் எடுத்தல்.
- உத்தியோகப் பற்றற்ற, சந்தேகத்திற்கு இடமான தகவல் என நீங்கள் கருத்துமிடத்து, அதனை எமக்கு அனுப்பாதிருத்தல்.
- ஆக்கமும், ஆக்கம் தருபவர் பெயரும், தங்களிடம் எதிர் பார்க்கப்படும்.
- சஞ்சிகைக் குழுவின் இறுதித் தீர்மானத்தின் படி ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும்.

தங்கள் ஆக்கங்களின் மென்பிரதிகளை (Soft Copy)

▶ 0755424333 எனும் WhatsApp இலக்கத்திற்கு

▶ it@navithanveli.ds.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு

ஒவ்வொரு மாதமும் 15ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்க முடியும்.

உங்கள் ஆதரவை எதிர்பார்த்து...
என்றும் அன்புடன்,
மின்னிதழ் குழு.